723

7 - FEB 19

நவமணி.

உள் நாடு ரூ 1

வெளி நாடு ரூ 1½

ஆசிரியன் சி. ரா. ம இராமநாதன்

NAVAMANI.

(A. High Class Tamil monthly)

PALLATUR. RAMNAD DT.

Vol. I. பிரமோதூத-௵ மார்க-௴ No 12.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள்வணக்கம்.	297
2.	ஸ்தலமஞ்சரி:— பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள். (முன்தொடர்ச்சி.)	298
3.	திரு. ஷண்முகஞ்செட்டியார் மசோதா:— (தலையங்கம்) பத்திராதிபர்.	299
4.	மணியொளி:— (குறிப்பு) பத்திராதிபர்.	304
5.	தேசியசுகம்:— திரு. அரு. சோமசுந்தரன் அவர்கள்.	308
6.	'சிவநேசன்' அபிப்பிராயம்.	312
7.	மஹாத்மாவின் சிறைவாழ்க்கை.	313
8.	கல்வியும்—வியாபார நோக்கமும். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.	317
9.	கனகவல்லி அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை:— கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.	320
10.	விகடத்துணுக்குகள்.	324
11.	ஆந்திரநாடு:— கோவை. திரு. சி. கு. நா.	326
12.	நாற்றிசை நடப்பு.	329

இப்புத்தகங்கள் வேண்டுமா?

எனது நெடுங்கனவு ரூ.	0—6—0.
இரட்டைப் புலர் சரித்திரம்.	0—6—0.
தமிழன்.	0—6—0.
ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதுபாடிய வரலாறு.	0—2—0.
'நவமணி' முதலாவதாண்டு காலிகோபைண்ட்	1—8—0.

மானேஜர்,

'நவமணி' பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

7 - FEB 193

கடவுள் வணக்கம்.

தனதன தனன தனத்தத் தாத்தன
தனதன தனன தனத்தத் தாத்தன
தனதன தனன தனத்தத் தாத்தன தந்ததான.

இருள்விரி குழலை விரித்துத் தூற்றவும்
இறுகிய துகிலை நெகிழ்த்துக் காட்டவும்
இருகடை விழியு முறுக்கிப் பார்க்கவும் மைந்தரோடே

இலைபிள வதனை மடித்துக் கேட்கவும்
மறுமொழி பலவு மிசைத்துச் சாற்றவும்
இடையிடைசிறிது நகைத்துக்காட்டவும் எங்கள் வீடே

வருகென வொருசொ லுரைத்துப் பூட்டவும்
விரிமள ரமளி அணைத்துச் சேர்க்கவும்
வருபொரு ளளவி லுருக்கித் தேற்றவும் நிந்தையாலே

வனைமனை புகுதி லடித்துப் போக்கவும்
ஒருதலை மருவு புணர்ச்சித் தூத்தர்கள்
வசைவிட நினது பதத்தைப் போற்றுவ தெந்தநாளோ

குருமணி வயிர மிழித்துக் கோட்டிய
கழைவட உருவு வெளுத்துத் தோற்றிய
குளிறிசை அருவி கொழித்துத் தூற்றிய மண்டுநீரூர்

குழிபடு கலுழி வயிற்றைத் தூர்ந்தெழு
திடர்மண லிறுகு துருத்திக் காப்பொதி
குளிர்நிழ லருவி கலக்கிப் பூப்புனை வண்டலாடா

முருகவிழ் துணர்க ளுகுத்துக் காய்த்தினை
விளைநடு இதணி லிருப்பைக் காட்டிய
முகிழ்முலை இளைய குறத்திக் காட்படு செந்தில்வாழ்வே

முளையிள மதியை எடுத்துச் சாத்திய
சடைமுடி இறைவர் தமக்குச் சாத்திர
முறையருள் முருக தவத்தைக் காப்பவர் தம்பிரானே.

ஸ்தலமஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிததை அசலாம்பிகை அம்மாளவர்கள்.

(சென்றமாதத் தொடர்ச்சி.)

திருவாரூர்.

பேரூரொன் றில்லாப் பெருமானூ ரிவ்வுலகில்
காரூருந் தேரூர்க் காதலித்தோ—ஆரூரில்
செல்வத் தியாகரெனச் செப்பினார் தன்னாமம்
கல்வித் திறமிதுவே காண். 90

என்குறைகள் வந்தா லியம்புவனென் றேகமலப்
பொன்குறைகள் தீர்க்கும் புனிதாநீ—முன்குறுகா
வண்ணம் பலநாளாய் வாரா தொழித்தனையவ்
வெண்ணம் பலியா தினி. 91

சீர்பெற்ற தெய்வத் திருவாரூர்த் தேசிகநீர்
பேர்பெற்ற வன்மை பிழையாமல்—நார்பெற்ற
பேதையேன் மெய்யருளே பெற்றுவக்க நின்கருணை
சோதியா தீயத் துணி. 92

என்குற்றம் பற்பலவா மென்றாலு மெந்தைபிரான்
தன்குற்ற மோதாரோ தாரணியோர்—வன்குற்றம்
பார்க்குங்காற் சுற்றமிலை பாரிலென ஔவைபுகல்
வாக்கொன்றே கொள்ளும் வழி. 93

வேந்தரெனப் பேர்கொள் விடங்கர்பிரான் நள்ளிரவில்
சார்ந்ததொழில் தாழ்வெனவுஞ் சாற்றாமல்—ஆர்ந்தமைதான்
தண்கமல நாயகியே சால்போ வமைச்சர்கடன்
பெண்கள்தமக் கன்றோ நீபேசு. 94

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி;'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்.]
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்.]

மாலை 1. } பள்ளத்தூர், பிரமோதூத, மார்கழி { மணி 12.

திரு. ஷண்முகஞ்செட்டியார் மசோதா.

கோவை திரு. ஷண்முகஞ் செட்டியாரை பொதுவாக இந்தியரும், சிறப்பாகத் தமிழ் நாட்டவரும் நன்கறிவர். நல்ல தேசபக்தியுடையவர். தனவந்தவர். சர்வகலாசாலைப் பட்டங்கள்பெற்றவர். முதிர்ந்த அனுபவம் உள்ளவர். இந்தியாவிலும் இந்தியர் பிரதிநிதியாக வெளி நாட்டிலுஞ்சென்று இந்தியர் நன்மையைக் கோரிப்போராடியவர். பெருஞ் சீர்திருத்தக்காரர். இந்திய சட்டசபை மெம்பர். இவ்வளவு பெருமைக்குங் காரணரான திரு. செட்டியாரவர்கள் நடக்கவிருக்கும் இந்திய சட்டசபைக் கூட்டத்தில் இருமசோதாக்கள் கொண்டுவரப்போவதாக முன்னறிக்கை செய்துள்ளார். அவைகளுள் ஒன்று தீண்டாமை விலக்கு மசோதா. மற்றொன்று பொட்டுக்கட்டுதலை ஒழிப்பதுபற்றிய மசோதா. இவைகளுள்,

தீண்டாமைஒழிப்பது எவ்வளவு அவசியமென்பதை நாம் புதிதாக உங்களுக்கு எடுத்தெழுதவேண்டுவதில்லை. இறைவனால் ஆக்கப்பட்ட மக்களுள் தர்மவான், பிச்சைக்காரன் என்றோ? அறிவாளி, மூடன் என்றோ? தொழிலாளி, சோம்பேறி என்றோ? ஆண், பெண் என்றோ இருஜாதிதான் இருக்கமுடியுமேயொழிய வேறு வகுப்புக்களிருக்கமுடியுமென அறிவாளிகள் ஒப்பமாட்டார்கள். மனிதரிலே மனிதரை அடிமையாக்கி ஒருவன் உழைத்து சம்பாதித்ததை மற்றவன் ஏமாற்றிப்பறித்துண்ணும் வழக்கம் நம்மிலிருந்து அடியோடு ஒழிந்துகொண்டுவரும் இக்காலத்திலும் நாம் நம்மினத்தாரில் ஓர் சாராரை அடிமையாக்கி அவர்களைத் தீண்டக்கூடாதென்றுந் தொடக்கூடாதென்றும், நமது வீட்டிலிலுள்ள மிருகங்கள் அனுபவிக்குஞ்சுகத்தைக்கூட அவர்கள் அனுபவிக்கக்கூடாதென்றுஞ் செய்துவருவது எவ்வளவு கொடிது. நமது தெருவிலே நமது வீட்டிற்குள்ளே கேவலமாகத்திரிந்துவரும் நாயைக்கூட நுழைய அனுமதிக்கிறோம். நம்போன்று மக்களாய்ப்பிறந்த தீண்டாதவரென்ற சமூகத்தவரை நாம் நுழைய அனுமதிப்பதில்லை. இது எவ்வளவு கொடிது என்பதை உற்று நோக்குங்கள். நாம் நமது சகோதரரை நாயினும் கடையாக்கிய தோஷத்தாலல்லவோ இன்று நாம் பிராமணர் கையில் சிக்கியுள்ளோம். அவர்களுஞ்சேர்ந்து நாம் எல்லோரும் தீண்டாதவர்களை அடிமையாக்கியதால் நாம் எல்லோரும் 6000 மைலுக்கு அப்பாலுள்ள வெள்ளை ஜாதியார் கையில் சிக்கிக் கஷ்டப்படும்படியான நிலைக்கு வந்துள்ளோம். நமது கஷ்டநிலையுணர்ந்து இனி உங்கள் கையில் சிக்கியிருக்கமாட்டோம். உடனே எங்களைப் பூரண விடுதலைசெய்துவிடுங்கள் என்று இப்பொழுது நாம் பிரிட்டிஷார்முன் போராடுகிறோம். பிராமணர்களை நோக்கி எங்களுக்குங் கடவுளுக்கும் மத்தியில் நீங்கள் தரகர்களாகவிருந்தது போதும். இனி நாங்களே நேரில் கடவுளைகண்டுகொள்ளுகிறோம். உங்கள் கடையைக் கட்டுங்கள் என விவாதிக்கிறோம். புத்துணர்ச்சிபெற்று நமது விடுதலையைக் கோறும் நாம் நமது சகோதரர்களில் ஒருவகுப்பாரை அடிமைப்படுத்தியுள்ளதை முதலில் கவனித்து விடுதலைசெய்ய எம்முயற்சியும் செய்தோமில்லை. அம்மக்கள் இப்பகுதிகளில் படுங்கஷ்டத்திற்கு அளவேயில்லை. நல்ல உடையில்லை. உயர்ந்த உணவில்லை. சுகாதாரமென்பதே

அவர்களுக்கு இன்னதெனத்தெரியாது. குளங்களிலும் பொதுக் கிணறுகளிலும் ஜலமெடுக்கக்கூடாது. ஒவ்வோர் ஊரிலுமுள்ள முனிசிபாலிட்டியோ, யூனியனோ அவர்களிடத்திலுமிருந்து வரியும் வாங்கினபோதிலும் அவர்களைக் கொஞ்சமேனும் கவனிப்பதில்லை. கவர்ன்மெண்டார் கடமையையுன்னி சிலபள்ளிகளை நடத்திவந்தபோதிலும் தக்க கல்வி வசதி கிடையாது. அவர்களின் மக்கள் நம்மக்களைப்போல் மனோ உல்லாசத்தை அனுபவிக்கமுடியாது. இவ்வளவு கஷ்டத்தில் அவர்களை வைத்துள்ள நாம் நமது சுதந்திரத்தை நாட அருகதையுள்ளவர்களா என்பதை யோஜிப்போமானால் வெட்ககரமான விஷயமாகவிருக்கும். திருஷ்டாந்தம் ஒன்று எழுதுகிறோம். அவர்கள் இப்பள்ளத்தூரில் குடிதண்ணீர் எடுக்க எல்லாக் குளங்களிலும் விடப்படுவதில்லை. ஒன்றிரண்டு குளங்களில் அனுமதிக்கப்பட்டாலும், கோடியிலுள்ள ஒரே துறையில் இறங்கிப் பானையை வெளியில் வைத்துவிட்டு பனையோலையாலாகிய பெட்டியால் ஜலத்தை எடுத்துப் பானையை நிறப்பிக்கொண்டு போகவேண்டும். ஏனைய மக்களுக்கோ குடிதண்ணீர்க் குளம் நான்கிருக்கின்றன. குளிக்கப்பல குளங்களும் ஏறிகளுமுள்ளன. இவ்வளவையும் அனுபவித்துவரும் மக்கள் அவர்கள் பங்கைப்பறித்ததுமன்னியில் அவர்களின் ஸ்நானபான வசதிக்காக ஒன்றையேனும் ஒதுக்கினர்களில்லை. இப்படியே செல்வாக்கும் பணமிகுதியும் பெற்றுள்ளவர்களே ஒவ்வோர் ஊரிலும் சுகத்தை அனுபவிக்கவேண்டிய வசதிகள் செய்துகொள்ளுகின்றனர். இத்தீண்டாத சகோதரர்களின் பாட்டை கவனிப்பார் யாருமில்லை. நாங்கள் கவனிக்கிறோம் எனசசொல்லும் சிறு சீர்திருத்தக் கூட்டக்காரர்கள் வேலை போதிய பலன்தரவில்லை. எனவே, எதற்குஞ் சட்டங்கண்டால் அஞ்சும் மக்களிடையே சட்டமூலமாகவே இதையும் தொலைக்கவேண்டுமென்ற முடிவிற்கு நமது செட்டியாரவர்கள் முன் வந்து இத்தீர்மானத்தைக்கொண்டுவர முனைந்துள்ளார்கள்.

மற்றொன்றாகிய பொட்டுக்கட்டுதலைத் தடுக்கும் மசோதா பற்றி நாம் புதிதாக இன்று எழுதப்போவதில்லை. பத்திரிகையுலகில் பணியாற்றப்புகுந்த நாள் முதலாக தெய்வத்தின் பெய

ரால் விபசார முத்திரை போடுதலே பொட்டுக்கட்டுதலென்பதைத் தவிர பொட்டுக்கட்டிக்கொள்ளும் மக்களால் தேவாலயங்களுக்கோ பொதுஜனங்களுக்கோ எவ்வித நன்மையுமில்லை. ஆனால் தீமையுமில்லாமலில்லை என எடுத்தெழுதிவிட்டோம். இது பற்றி பலமுறை பலபெரிய சபைகளிலும் மஹாத்மாபோன்ற அறிவாளிகளிடையிலுங்கூடப்பேச்சுகள் நிகழ்ந்தன. நம்மாகாணத்தில் ஸ்ரீமதி முத்துலெக்ஷிமியம்மாள் போன்ற பெரும் மேதாவிகளுங்கூட மாகாண சட்ட சபையிலும் மசோதாக்கள் கொண்டுவந்தும் பஹிரங்கமாகப் பேசியும் எழுதியும் வந்தார்கள். ஆனால் அது இன்னும் பூரணவெற்றியைத் தரவில்லை. சில வைதீகர்களின் முட்டுக்கட்டையாலும் காமப்பிரியர்களின் சதிச்செயலாலும் இப்பழக்கம் இன்னும் மக்களிடையே இருந்துகொண்டே வருகின்றது. திருவாங்கூர், மைசூர், போன்ற சமஸ்தானங்களில் இப்பொழுது சட்ட மூலமாக இப்பழக்கத்தை அறவே ஒழித்துவிட்டார்கள். அதனால் வைதீகர்களின் கூற்றுப்படி தெய்வங்கள் அவர்களில்லையே என ஏங்கவில்லை. புதுக்கோட்டையிலும் இதை ஒழிக்க சட்ட சபையில் ஒரு மசோதா வரப்போகிறது. இங்ஙனமெல்லாமிருக்க இவ்வகண்ட இந்தியாவில் உயர்ந்த மக்களெனச் சொல்லிக்கொண்டு கீழ்ச்செயல்செய்யும் இக்கூட்டத்தவரிடையுள்ள இக்கொடிய பழக்கத்தை அறவே ஒழிக்கக் கொடிய தண்டனை கொண்ட பிரிவுகளுடன் கூடிய சட்டம் உடனே அமுலில் இருக்கும்படி சீர்திருத்தவாதிகள் செய்யவேண்டுமென்பது எமது நீண்டகாலைய அவா. இன் நிறைவேறச்செய்யும்செட்டியாரவர்கள் முயற்சி நன்முயற்சியாகுக! உலகில் மக்களையுங் கெடுத்துத் தாங்களுங்கெட்டு நூதனநோய்களை விர்த்திசெய்து நல்லவர்களையுங் கெடுத்துப்பலர்களின்பொருள்களையும்பறித்துச்சுகிக்கும்இவ்வகுப்பார் அறவே இப்பழக்கத்தைவிட்டு சீர்திருந்தவேண்டுமானல் அதற்குக்கடுமையான சட்டமும் தளரா ஊக்கமுள்ள நடுநிலைமையாளர்களின் கண்காணிப்பும் இருந்தேதீரவேண்டும். கோவில்கள் மனித சமூகத்திற்கு அறிவூட்டவும் கடவுள் ஞாபகத்தை அடிக்கடி காட்டவும் ஆங்காங்கு ஆக்கப்பட்டிருந்தபோதிலும் தேவதாசிக்களங்கம் அங்கு ஏற்பட்டுவிட்டதால் அங்கிலைமாறி அவைகள் காமக்குகைகளுக்கொப்பாகிவிட்டன. இவர்கள்கோவில்களில்லாமல்

துறத்தியடித்தாலொழிய மஹாத்மாபோன்ற மேதாவிகள்இத்தாசிகள் வீட்டிலுள்ளதே போன்றுதான் கடவுள் கோவில்களிலுள்ளுமிருக்கிறார் என்ற பேச்சை உபயோகிப்பதை நிறுத்த மாட்டார்கள்.' எங்கும் நிறைந்த ஸர்வேசுவரன் அறிஞர்களின் இருதயத்தில் இருப்பதற்கும் இத்தாசிகளின் இருதயத்திலிருப்பதற்கும்இவ்வளவுவித்தியாசங்காண சர்வத்தையும் சமதிருஷ்டியுடன் நோக்கும் உலகப்பெரியாரின் மனதில் எண்ணம் ஓர் இடம் பெற்றிருக்குமானல் அப்பொழுது இவ்வழுக்கிய சகோதரிகளின் தன்மையை எவ்வளவுதூரம் வருத்தத்துடன் அவர்கள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள்என்பதை அறிஞர்கள் யோசிக்கவேண்டுகிறோம்.

நாம் யாவரும் சமமாக முன்னேற்றமடைய வேண்டுமென்ற பெரு நோக்கம் உள்ள ஒவ்வொருவரும் தீண்டாமையை ஒழிப்பதுபோன்றே தேவதாசிப் பழக்கத்தையும் ஒழிக்கவேண்டுமென விரும்புவர். தீண்டாமையால் தேச முன்னேற்றத்திற்கு எவ்வளவு தடையுளதோ அதனிலும் அதிகமாகவே இத்தேவதாசிப் பழக்கத்தாலும் தேசநலம் தடைப்பட்டுள்ளது. திரு.செட்டியாரவர்கள் தமது உயரிய பணிகளுள் இவைகளையும் மேற்போட்டுக்கொண்டு சட்டஞ்செய்ய முற்பட்டிருப்பதுகண்டு நாம் அவர்களைப்பாராட்டுகிறோமாயினும் சிலசொல்ல முன்வருகிறோம். இச்சட்டங்கள் வருமுகத்தான் தங்களுக்குப் பல்வேறு எதிர்ப்பும் வைதீகர்களின் பகையுங் கட்டாயம் வரவே செய்யும். இந்தியசட்டசபையில்வைதீகர்கள் ஒரேயடியாக இச்சட்டங்களை செய்யவொட்டாதபடி எவ்வளவு தடுப்பினும் வெளியிலுள்ளோர் கூடி எத்தனை தீர்மானங்கள் செய்தனுப்பினும் அதுகண்டு மனச்சோர்வடையாது ஒரே முகமாக நின்று எவ்வாற்ருனும் இத்தீர்மானங்களை நிறைவேற்றச் செய்து சட்டமாக்கி அதை அமுலுக்குக்கொண்டுவந்து தீண்டாமையும் பொட்டுக்கட்டுவதும் நம் இந்திய நாட்டில் ஒழிந்தது என்னும் பெயர் எடுக்கும்வரை சலியா உழைப்பு எடுத்துக் கொண்டால் அது ஒன்றே மிகச்சிறந்த புகழைத் தங்களுக்கு நிலைநாட்டுமென எச்சரிக்கிறோம். உங்கள் முயற்சி ஜெயம்பெற எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக!

மணியொளி.

சொக்கலிங்க ஐயா.

சைவத் திருவாளர் சொக்கலிங்க ஐயா அவர்களைத் தனவணிக நாட்டவர் நன்கறிவர். அவர்கள் காரைக்குடியில் நள ஆண்டு ஆடித்திங்கள் 23-ம் நாள் தனவணிகர் குலத்திற் பிறந்து அன்று முதல் அக்குலத்திற்கோர் திலகமெனப் பெயர் வாங்கும் முறையில் அவர் தம் பெற்றோர்களால் வளர்க்கப்பெற்று சைவ சமயமும், தமிழும், தமது சமூகமும் முன்னேற்றமடைய வேண்டிய சகலகலையு மோதி உயர் ஒழுக்கத்தோடு அத்தொண்டுகளில் காலந்தள்ளித் தனது 75வது வயதில் பிரமோதூத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 28-ம் நாள் தனது ஸ்தூல சரீரத்தைவிட்டு சூக்ஷமத்தில் கலந்தார் என்ற செய்தி எட்டியுள்ளது. இன்னார் ஏனைய மக்கள்போல் பிறந்தார். இறந்தார். எனும்சொல்லுக்கிலக்காகாது தோன்றிற்புகழொடுதோன்றுக என்னும் முதியோர் வாக்கை மெய்ப்பிக்க ஓர் திலகமாக வாழ்ந்ததே எத்தனையோ மக்கள் இப்பூவுலகில் இறந்தும் இவர்களைப் பற்றிமட்டும் நாம் விசேடமாகக் குறிப்பிட இடம் பெற்றுள்ளது. இப்புகழுக்கிலக்கான ஆன்மாவின் கூடு நம்மைவிட்டுப் பிரிந்தபோதிலும் அக்கூட்டுடன் அவர்வாழ்ந்தகாலையில் செய்த வேலைகள் நம் முன் அவரை ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கின்றன. நாமும் அதைப் பின்பற்றி அவர்களுக்குக் கல்வி, சமயம், சமூகவளர்ச்சியில் இருந்த ஆர்வத்தை விசேஷமாக ஆதரித்துப் பணியாற்றவேண்டுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும். அதை யாவரும் செய்யவேண்டுவதோடு அவரது குடும்பத்தார் அவரது பிரிவுகண்டு வருந்தாதிருக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வீரர். முஹம்மதாலி.

இந்தியவீரர்களெனப் பெயர்சூடி வாழ்ந்த மௌலானாக்களான ஷௌக்கத்தாலியையும் அவர் தம் சகோதரர் முஹம்ம

தாலியையும் பொதுவாக இந்தியர் யாவரும் நன்கறிவர். இவ்வீரர்களுள் இளையவரான முஹம்மதாலி உயர்ந்த நோக்கும், கம்பீரத் தோற்றமும், வாக்குவன்மையும், ஆக்ஸ்போர்ட் ஆக்ரா, முதலிய சர்வகலாசாலைப் பட்டங்களும் பெற்ற வீர புருஷர். தமது மதத்திலும் மிகுந்த பற்றுடையவரானபோதிலும் இந்துமுஸ்லீம் ஒற்றுமையில் மஹாத்மாஜீயுடன் எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாக விளங்கி ஈடில்லா உழைப்பெடுத்துக்கொண்டவர். மஹாத்மாஜீயின் அரிய நண்பர். முஸல்மான் தலைவர். தேசீய மஹாசபையின் மாஜித்தலைவராக இருந்தவர். இப்பெரியார் இப்பொழுது லண்டனில் நடைபெறும் சர்வககூஷி மஹாநாட்டிற்குத் தனது தேக அசௌகர்யத்தையும் பொருட்படுத்தாது சென்று அங்கு செய்த வீர உரைகளைப்பற்றி நாம் நமது சென்ற மணியின் தலையங்கத்தில் கூடக் குறிப்பிட்டிருந்தோம். அதேபோன்று அவர் தனது தேக அசௌகர்யத்தைக் கொஞ்சங்கூடக் கவனியாமல் அங்கு நடைபெற்ற ஹிந்துமுஸ்லீம் சமரசத்தில் கலந்துகொண்டு சதா அதேஸ்மரணையாக இருந்து சக்திமீறிய யோஜனை காரணத்தால் இரத்தக்குழாய் வெடிப்புண்டு மாண்டார் எனும் செய்தி இந்தியர் யாவரையும் திடுக்கிடச் செய்யுமென நம்புகிறோம். இப்பெரியாரின் பிரிவு பொதுவாக உலகத்திற்கும் சிறப்பாக இந்திய சமூகத்திற்கும் பெரும் நஷ்டமாகும். மஹாத்மாஜீ தமது அரிய ஓர் பெரும் நண்பரை இழந்தது பெரிதும் குறிப்பிடத்தகுந்த விஷயம். இப்பெரியார் தமது வீர உரையில் குறிப்பிட்ட அடிமை நாட்டிற்குச் சுதந்தரமின்றித் திரும்பமாட்டேன் என்றதேபோல் சுதந்தரத்திற்காகவே சிறப்பாக ஹிந்துமுஸ்லீம் சமரஸத்திற்காகவே தமது உயிரை பலியிட்டார். இப்பெரியாரின் பிரிவுகண்டு வருந்தும் அவரது சகோதரர் மௌலானா ஷௌக்கத்தாலியவர்கட்கும் அவரது குடும்பத்தார்கட்க்கும் நமது வருத்தத்தையும் அறிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மாசாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இரு புதிய அவசரச்சட்டங்கள்.

மீண்டும் இந்திய வைசிராய் இர்வின் பிரபு இறந்துபோன அச்சுச்சட்டத்தை புதிய சில கடுமையான உட்பிரிவுகளுடன்

உயிர்ப்பித்திருப்பதோடுவரி மறுப்புத்தூண்டுதல் சட்டமென்றோர் அவசரச்சட்டத்தையும் ஆக்கியுள்ளார்கள். இத்துடன் பதினொன்று அவசரச்சட்டங்களாகிவிட்டன. சட்டப்படி மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் உத்தரவுபெறாது வெளிவரும் துண்டுப் பிரசுரங்களையும் அதை அச்சிடும் அச்சுக்கூடங்களையுங்கூட இப்புதிய அவசர அச்சுச்சட்டம் பாதிக்குமாம். இனிப் பத்திரிகைக்காரர்களும் அச்சுக்கூடக்காரர்களும் தங்கள் தொழிலை நிறுத்திவைப்பதைத் தவிர வேறு நஷ்டங்களுக்கு உள்ளாக முடியாதென்பதையும் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டோர் யாவரும் தேசிய வேலையிலீடுபவதே நலம் என்பதையும் எடுத்துரைப்பான் போன்றுள்ளது இப்புதிய சட்டங்களின் பலன்.

வெடிகுண்டு.

ஆங்காங்கு வெடிகுண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள் பரவிவருகின்றன. துப்பாக்கிச்சூட்டுச் செயலும் பெருகிவருகின்றன. இது தேசத்தவர்களின் ஆத்திரத்தைக் காட்டுகிறபோதிலும் சட்டமறுப்பியக்கத்திற்கும் இதற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமுளதென்பது யாவரே அறியார்? சட்டமறுப்பாளர் பிறருக்கு ஹிம்ஸையைக்கனவிலுங் கருதுதல் கூடாதென்பது அதன் தலையாயவிதி. அங்ஙனமிருக்கப் பலாத்காரப் புரட்சியாளருக்கும் சட்டமறுப்பாளருக்கும் எவ்விதம் தொடர்பிருக்கமுடியும். அநேக இடங்களில் இப்பலாத்காரச் செய்கையாளர் கொடிய கொலைகளை இயற்றிவருகின்றனர். சமீபத்தில் லாகூரில் பஞ்சாப் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள பஞ்சாப் கவர்னர் சென்று திரும்பும் பொழுது அவரை ஒருவர் பலமுறை சுட்டதில் அற்பக்காயம் அவருக்கு ஏற்பட்டதுடன் இன்னும் பலருக்குப் பலத்தகாயமும் ஒருவருக்கு உயிர்சேதமும் ஏற்பட்டதாம். இதனினும் தேசத்திற்குக் கொடுமையை இழைக்கக்கூடிய செயல் வேறொன்றுமில்லை. இத்தியாதி கூட்டத்தவர் உண்மையில் தேசநலத்திற்காக இதைச் செய்வதாக எண்ணினாலும் அது தேசநலமாகாது. நலத்தைக் கெடுப்பதாகவே ஆகும். எனவே, அவர்கள் குற்றவாளிகள்தானே தவிர தேசபக்தர்கள் ஆகார்கள்.

தேசபக்தர்களுக்கும் இவர்களுக்கும் எள்ளளவாவது சம்மந்த மிருத்தல் கூடாது. இச்சூட்டிற்கு இலக்காகாமல் இறைவனருளால் தப்பிய பஞ்சாப் கவர்னரவர்களை நாம் பாராட்டுவதோடு அங்கு மரணமடைந்த வீரரின் ஆத்மாசாந்தியடைய வேண்டுகிறோம். இந்நிகழ்ச்சி பெரிதும் வருந்துவதற்குரியதொன்றும். இது எங்கு நடப்பினும் நடக்கவிருப்பினும் தேசீயப்பற்றுடையார் இதை அறவே தடுக்கவேண்டுவது அவசியத்தினு மவசியம்.

பிரசிடெண்ட் படேல்.

இந்தியா சட்டசபையின் மாஜித் தலைவரான வி. ஜே. படேலின் தேகநிலை சிறையில் மிகச் சீர்கேடுற்று ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக விருப்பதாக அவரை வேறு சிறைக்கு மாற்றவேண்டு மென்று கேவை சிறைக்குக் கொண்டுவந்தனர். இங்கும் அவரின் தேக நிலை முன்போலவே இருக்கிறது. அவரின் தேகத்தை பரிசோதனை செய்த அவரது குடும்ப வைத்தியர்கள் உடனே அதிகாரிகள் பிரசிடெண்ட் படேலைக் கவனித்துத் தக்க வைத்தியர்களைக்கொண்டு எக்ஸ்ரேபரிசோதனை செய்து ஐரோப்பாவிலேனும் இந்தியாவிலேனும் சுகாதார வசதியுள்ள ஓர் இடத்தில் அவர் ஓய்வெடுத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் இல்லையேல் அவர் தேகநிலை கவலைக் கிடந்தரக்கூடியதாக விருக்கிறதென்றும் அறிக்கை செய்துள்ளனர். அறிஞரும் வயது முதிர்ந்தவரும் உயர்ந்த செல்வத்தை அனுபவித்தவருமான படேல்ஜீயை உடனே விடுதலைசெய்துவிட வேண்டியதுதான் அரசாங்கத்தின் கடமை எனநாம்எண்ணுகிறோம். உடல்நிலை சரியாக இல்லாததாலேயேபண்டித மோதிலால்ஜீயையும் பண்டித மாளவியாஜீயையும் விடுதலைசெய்த சர்க்கார் படேல்ஜீ விஷயத்திலும் அக்காருண்யத்தைக் காட்டப் பின்வாங்குவதேனோ? அவரின் தேக நிலை சீர்பட உடனே விடுதலைசெய்யப்பட்டு ஓர் சிறந்த இடத்தில் தக்க ஓய்வெடுத்துக்கொள்வது தான் நன்மையே தவிர ஜயிலில் இன்னும் பூட்டிவைப்பதால் வியாதி குணம்பெற மார்க்கமாகாது. அதுபற்றி சர்க்கார் சீக்கிரம் யோஜிப்பது நலமாகும்.

குறிப்பு:—இது அச்சாகுந்தறுவாயில் அவர் விடுதலைபெற்றசெய்தி கேட்டு சந்தோஷிக்கிறோம்.

தேசிய சுகம்.

திரு. அரு. சோமசுந்தரன் அவர்கள் எழுதுவது.

(285-வது பக்கத் தொடர்ச்சி.)

வீடுகளில் சொந்தமாகத் தமக்குத் தயாரிப்பதைப்போல் பிறருக்கும் தயார்செய்து விற்பது போற்றத்தக்க முறையாகும். கடைத் தெருவில், பெரிய வியாபார தோரணையில் கூலியாட்களை நியமித்து கவனமற்றமுறையில், தின்போர் சுகத்தைக் கருதாமல் லாபம் ஒன்றையே பெரியதாகக் கருதி அசுத்தமான முறையில் தயார்செய்வது தேசசுகத்திற்குக் கேடுபயப்பதேயாகும். நல்ல இடத்தில், நல்ல சாமான்களைக் கொண்டு, அசுத்தமில்லாத ஆட்களின் உதவியால் கவனத்துடன் சுகாதாரமுறையில் செய்யப் பெறும் பெரிய சிற்றுண்டிச்சாலைகளும் சோற்றுக்கடைகளும் ஏற்படுமானால் பரவாயில்லை. அதற்கு ஆங்காங்குள்ள பொதுஜனங்கள் கூட்டுறவு முறையில் சோஷியல் கிளப்புகள் ஏற்படுத்துதல் வேண்டும். காலைப்பலகாரமும் மாலைச் சிற்றுண்டியும் தற்காலத்தில் இன்றியமையாத தேவையாக வந்துவிட்டபடியாலும், பலர் வீடுகளிலின்றி வெளிக்கடைகளிலேயே சாப்பிடும் வழக்கத்தை மேற்கொண்டுவிட்டபடியாலும் ஒவ்வொரு ஊரிலும் சோஷியல் கிளப்புகள் ஏற்படவேண்டுவதும், அசுத்தப் பலகாரக்கடைகள் நீங்கவேண்டுவதும் அவசியமாகும். அப்பொழுது சிற்றுண்டிசாலைகளாலும், சோற்றுக்கடைகளாலும் உண்டாகும் தீமைகள் குறையும். வியாபாரக்கடைகள் திருந்திய முறையில் நடைபெறும்என்று எதிர்பார்த்தல் இயலாததேயாகும். உண்ணும் அங்கத்தினர்கள் மேற்பார்வையில் கவனத்துடன் தக்கசாமான்களையும், தக்க வேலையாட்களையும் கொண்டு நடைபெறும் பொதுஜனங்கள் கலந்துபழகும் நிலையங்களே (Social Clubs) இக்குறையைக் களைவதாகும்.

இனிப் பெரும்பான்மையான ஊர்களில் கால்வாய்களும் ஊருணிகளும் அசுத்தஞ்செய்யப் பெறுவதால் உண்ணும் நீர்

பெரிதும் கெட்டுப்போகிறது. ஊர்மக்கள் அனைவரும் உண்ணும் நீரை அசுத்தப்படுத்தித் தம்மக்களுக்குத் தாமே நோய்களை அபிவிருத்தி செய்வதைப்போல் அறியாமை வேறு ஒன்றும் இல்லை. கால்வாய்களில் மலஜல விஜர்ஜனம் செய்வதும், ஊருணி நீரில் கால்கை கழுவுதலும், பல்துலக்கி வாய்கொப்பளித்தலும் பாத்திரந் தேய்த்துக் கழுவுதலும் மிகவும் தீமை பயப்பதாகும். எனவே அவைகள் அவசியம் ஆங்காங்கு காவற்காரர்கள் வைத்துத் தடுக்கப்பெறுதல் அவசியமாகும். உண்ணும் நீர் அசுத்தம் செய்யப்பெறுவதனாலேயே, நரம்புச்சிலந்தி, முதலிய தொத்து நோய்கள் எல்லாம் பரவுகின்றன. ஒவ்வொரு ஊரிலும் குடிநீர் எடுத்தற்குச் சில ஊருணிகளையும், குளித்தற்குச் சிலவற்றையும், வேஷ்டி துவைத்தற்குச் சிலவற்றையும், மாடுகுளிப்பாட்டுதல், கார்கழுவுதல், பாத்திரந்தேய்த்தல் கால்கழுவுதல் ஆகியவற்றிகுச் சிலவற்றையும் தனித்தனியே ஒதுக்கிவைத்து எச்சரிக்கைப் பலகைகள் எழுதித் தொங்கவிடப்பெறுதல் வேண்டும். பூச்சி புழுக்கள் நிறைந்த குட்டை குளங்களை ஜனங்கள் எதற்கும் உபயோகியாதவாறு மூடிவிடுதல் வேண்டும். ஊருக்குநடுவண் அசுத்தமான இயந்திர ஆலைகளைவைத்துக் காற்றைக்கெடுத்தல்கூடாது.

புதைகுழியும் சுடுகாடும் மலஜம் கழிக்கும் பொது இடங்களும் ஊருக்குப்புறத்தே தூரத்தில் இருத்தல் வேண்டும். ஊருக்கு நடுவணாவது சமீபத்திலாவது இருத்தல் கூடாது. கடைத் தெருக்களும் சந்தைத்திடல்களும் கூடங்களும் அடிக்கடி சுத்தஞ்செய்யப்பெறுதல் வேண்டும். வண்டிப்பேட்டை. கார் நிறுத்துமிடம் ஆகியவை சுத்தமாக இருத்தல் வேண்டும். பொது ஜனங்கள் தமது உடற்சுத்தம், வீட்டுச்சுத்தம் பொதுஇடங்களின் சுத்தம் ஆகியவற்றையும் அவசியம் கவனித்தல் வேண்டும். குப்பைத்தொட்டிகளிலேயே குப்பையைக் கொட்டுதல் வேண்டும். வீடுகளில் அவசர நிமித்தத்தின் பொருட்டு அவசியம் கக்கூஸ் இருத்தல் வேண்டும். கால்வாய்களையும் தெருக்களையும் கக்கூஸாக உபயோகப்படுத்தும் வழக்கம் அடியோடு நின்றுவிடுதல் வேண்டும். ஊருக்கு அப்பால் வெகுதூரம் கைச்செம்பில் தண்ணீருடன் நடந்துசென்று காலைமாலை வேளைகளில் இயற்கைக் கடன்களைக்

கழித்தலே தகுதியுடையதாகும். பொதுஜனங்களுக்கு யாவும் சுத்தமாயிருத்தல் வேண்டும். இன்றேல் நோய்பரவும் அதனல் நாமும் நம்மக்களும் துன்புறுவோம். என்ற சுகாதார உணர்ச்சி (Sanitary Concience.) அவசியம் ஏற்படுதல் வேண்டும். பொதுஜனங்கள் ஆறுகளையும் ஆற்றங்கரைகளையும் கோயில் குளங்களையும் சத்திரங்களையும் தங்குமிடங்களையும் பொதுமண்டபங்களையும் ரயில்வண்டிகளையும் வெற்றிலை எச்சில் உமிழ்ந்தும், உண்டு மீதியானகழிவுபதார்த்தங்களை எறிந்தும்,வாந்தியெடுத்தும் வேறுபலவகையாலும் ஆபாசப்படுத்தும் முறை சொல்லுந்தரத்தன்று. இதனல் ஜனங்களுக்கு உண்டாகும் தொத்துநோய் வகைகளும் எழுதுந்தரத்தனவல்ல.

தொத்து நோயாளர்கள் பொது இடங்களில் செய்யும் அக்கிரமங்கள் மிக அதிகமாகும். தொத்து நோயாளர்கள், சில இடங்களில்கோயில்களிலும் மடங்களிலும்காப்பிக்கிளப்புகளிலும் வேலைகளிற்கூட அமர்ந்து தொண்டு செய்து நோயைப் பரப்புதல் மிகவும் பரிதாபகரமான விஷயமாகும். பொதுஜன சுகாதார அபிவிருத்திக்கு, தேசசுக முன்னேற்றத்திற்கு இவைகளையெல்லாம் கவனித்துச் சீர்திருத்துதல் மிகவும் அவசியமாகும். தொத்து நோயாளிகளை எவ்வளவு நெருங்கியவராக இருந்தாலும் வீடுகளில் வைத்துக்கொள்ளாது தக்க வைத்தியசாலைகளுக்குச் சென்று மருத்துவஞ் செய்துகொண்டுவரும்படி தயைதாக்ஷண்யமின்றி அனுப்பிவிடுதலே உத்தமம். வீடுகளிலேயே வைத்துக்கொண்டு யாவருக்கும் நோய்பரவுமாறு செய்தல் பெருந்தீமையை விளைவிப்பதேயாகும். 'சுகாதார முறைகளாலேயே சுகம் உண்டாகிறது' என்ற உணர்ச்சி பொது ஜனங்களிடையே அவசியம் பரவுதல்வேண்டும். நமது கிராமங்களும் வீதிகளும் தோட்டங்களும் பொது இடங்களும் இருக்கும் சர்வாபாச நிலையை ஓர் அறிவும் ஆசார அநுஷ்டானமும் உடைய மனிதன் கண்கொண்டு நோக்க முடியாது. தற்பொழுது இருப்பதைவிட இனிக்கேவலமான நிலையை நமது ஊர்களும், நிலயங்களும், அடையமுடியாது. எங்கும் அசுத்தம், எங்கும் ஆபாசம்,எதனினும் சுகாதார அலக்ஷியம், அசுத்தம் செய்தல் குற்றம். சுகாதார முறையைக்கவனியாது

நடத்தல் சிறப்பாக நமக்கும் பிறர்க்கும் பொதுவாக தேக சுகத்திற்கும், தேச பலத்திற்கும், கேடு என்பதைப்பலர்உணருவதில்லை. தனித்தனி ஒவ்வொருவரும் சுகாதார அபிவிருத்தியில் நாட்டஞ் செலுத்துதலோடு, நகரசபை, பஞ்சாயத்து முதலியவைகளும் தக்க சிரமத்தை எடுத்துக்கொண்டு உண்மையோடு உழைத்தல் வேண்டும். அரசாங்க சார்புபெற்ற பஞ்சாயத்துக்கள் இல்லாத ஊர்களில், பொது ஜனங்கள் தாமாகவே, சுகாதார சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு சுகாதார அபிவிருத்தி செய்யலாம். சிறு குழந்தைகள், பள்ளிப்பிள்ளைகள் வரை யாவருக்கும் சுகாதார உணர்ச்சி உண்டாகும்படி செய்தால் தேசசுகம் வளரும். தேக பலமும் தேசபலமும் நல்வாழ்வும் விருத்தியுமடையும்.

நமது தேசத்தில் மக்கள் பலங்குன்றி இளவயதிலேயே கிழத்தன்மையடைவதற்கும், உயரம் பருமன் நிறை குறைவதற்கும் பலமற்ற சந்ததியை உற்பத்திசெய்வதற்குங் காரணம் பால்ய விவாகமேயாகும். இளங்குழந்தைகளுக்கு மணம் செய்து இளவயதிலேயே தொடர்புகொண்டு மணவாழ்க்கை வாழச்செய்வதும், பால்ய பிரசவங்களால் துன்புறச்செய்வதும், நலிந்து மெலிந்த தோன்றல்களை தோற்றுவிக்கச் செய்வதும், மஹா பரிதாபகரமான விஷயமாகும். தேச சுகமும் தேக பலமும் க்ஷீணமாகி நாசமடைவதற்கு பால்யவிவாகம் ஒரு முக்கிய காரணமாகும். விளையாட்டாகச் செய்யும் மணம் பெரு வினையாகத் தேச சுகத்திற்கே பெருந்தீங்காக முடிவதை யாவரும் உணருதல் வேண்டும். பால்ய விவாகத்தினலேயே பால்ய மரணங்களும், பிரசவத்தில் இறத்தலும், சிசுமரணமும், மக்கள் மெலிந்த தேகத்துடன் நோயாளராக உண்ணும் உணவுகூடச் செரிக்க இயலாதவர்களாக அரை குறை வாழ்வு வாழ்தலும் ஏற்படுகின்றன என்பதை எல்லோரும் உணரவேண்டும். பருவம் வந்தபிறகு மணஞ்செய்தலே தகுதியுடைமையாகும்.

தேசத்து மக்களே தேச சுகத்தையும், பலத்தையும், பொருளாதாரத்தையும் கல்வியையும், வாழ்வையும் பரிபாலித்தல்வேண்டும். பரிபாலனமின்றேல் நாடு கள்ளி முளைத்த நாடாகவே இலங்கும். தேச சுக அபிவிருத்தியில் எவ்வளவு கவனம் செலுத்து

கிரேமோ அவ்வளவு நாடு நலம்பெறும். சுகாதார முறையை விருத்திசெய்யும், நீராடல், துப்புறவு செய்தல், தொத்து நோய்கள் பெருமை முதலிய நற்பழக்க வழக்கங்களையும் சிறந்த அநுஷ்டானங்களையும் நாம் கை நழுவவிடக் கூடாது. சுத்தம் சுகம்தரும் என்பதை மறத்தல் கூடாது. ஊர்கடோறும், சுகாதார சபைகளும், உடற்பயிற்சிக் கழகங்களும், உலாவுமிடங்களும், இளைப்பாறுதற்குரிய பூந்தோட்டங்களும், விளையாடுமிடங்களும், சோஷியல் கிளப்புகளும் தோன்றுதல் வேண்டும். பிரத்தியக்ஷமாகக் கவனித்தால் நன்மையையும், கவனியாவிட்டால் தீமையையும் முறையே தருவன சுகாதாரமும் அசுகாதாரமுமேயாகும். தேசிய சுகம் வளருவதற்குத் தேசத்து மக்கள் தேசிய சுகாதாரத்தை வளர்த்தல் வேண்டும்.

சிவநேசன் அபிப்பிராயம்.

‘நவமணி.’

இது, பள்ளத்தூரிலிருந்து வெளிவரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு. “அருணகிரி” என்னும் வாரவெளியீட்டின் ஆசிரியராயிருந்த திரு. சி. ராம. இராமநாதன் இதன் ஆசிரியராவர். இதனது ஒவ்வொரு மணியின் தொடக்கத்திலும் கடவுள் வணக்கமாகத் திருப்புகழ் முதலிய பெரியோர் பனுவல்களைத்தாங்கி வருவதால், ஆத்திக வரம்பு கடவாது, நாட்டுக்கு நலன் பயக்குந் தொண்டாற்றுங் கடப்பாடுடையதாகக் காணப்படுகிறது. இதில் பல பண்டிதமணிகளின் சிறந்த கட்டுரைகளும், நாவல்களும் வர்த்தமானங்களும் தெள்ளிய முறையில் அச்சிட்டு வெளிவருகின்றன. இதனது மாலை—1. மணி 9ன், “இதுவாமணம்?” என்னும் தலையங்கத்தில், விதி விலக்கின்றிக்காதல் சென்றவழியே கலந்துகொள்ளும் முறையாகத் தற்காலம் நடைபெறும் சுயமரியாதைமணங்களை உடன்படல் மறுத்தலாகச் சிறந்த பல காரணங்காட்டி விளக்கியிருத்தல் சாலப்பொருத்தமாகும். இதன் ஆசிரியர், “காலையிலொன்றுவர், கடும்பகலிலொன்றுவர், மாலையிலொன்றுவர், மனிதரெல்லாம்...” என்பதற்கிலக்காகாது, என்றும் தாம்கொண்ட கொள்கையில் மாறுபடாது, உண்மையும் ஊக்கமும் உழைப்பும் உடையவராவார் என்பது குறிப்பிடத்தக்கதாம். இதன் ஆண்டுத்தொகை ரூபா ஒன்றே.

மஹாத்மாவின் சிறைவாழ்க்கை.

ஏர்வாடா சிறையில் தவங்கிடக்கும் நம்பெருமான் காந்தியடிகள் தமது காலத்தை எவ்விதங் கடத்துகிறாரென, அடிகளுடன் சிறையிலிருந்து சமீபத்தில் வெளிவந்த குஜராத்திய வித்தியாபீட பிரதம போதகாசிரியரான திரு. காக்கா கேலில்கார் செப்புவது பின்வருமாறு:—

அதிகாலையில் நான்குமணிக்கு நட்சத்திரங்களுடன் பூரண பிரகாசமுடன் ஜொலித்துக்கொண்டிருக்கும் பொழுது நாங்கள் அனுதினமும் நித்திரையிலிருந்து விழித்துக்கொள்வோம். 4—20 மணிக்கு காலை ஜெபம் ஆரம்பமாகும். ஜெபத்திற்குப் பின் கீதையை ஸ்மரிப்போம். ஸ்மரித்ததின் பின் நான் உலவுவதற்குச் சென்றுவிடுவேன். காந்தியடிகள் அரைமணிநேரம் வரை வாசிப்பார்; எழுதுவார்; அதன்பின் நாங்கள் ஒன்றுகூடுவோம். அது சமயம் நாங்கள் உலவுங்காலத்து கீதை, ஆசிரமம், உணவுமுறை, ராட்டை முதலியன சம்பந்தமாகச் சம்பாஷிப்போம். சரியாக ஆறுமணிக்கு நாங்கள் காலை ஆகாரம் அருந்துவோம். காந்திஜீயின் காலை போஜனம் தயிர் அல்லது பேரீச்சம்பழமாகும். காலைஆகாரம் முடியவும்கறவைக்குவெள்ளாடுகள்வந்துவிடுகின்றன. ஆட்டுக்குட்டிகள் பேராசையுடன்பால்குடிப்பதையும்அடிக்கடிசப்தமிடுவதையுங் கண்டு செவியுறுவதில் காந்திஜீ என்றும் சந்தோஷங்கொள்வார். ஆடு இலேசாக உதைக்கவும் குட்டிகள் திரும்பிவிடும். காந்திஜீயும் தாமதமின்றி இராட்டையில் அமர்ந்துவிடுவார். இந்தியாவின் கோரிக்கையையும் அதன் மீட்சியையும் பற்றி இராட்டையின் சக்கரம் ரீங்காரஞ்செய்ய ஆரம்பித்துவிடும். அழகிய முறையில் செவ்விய முறையில் அமைக்கப்பெற்றதோர் இராட்டை சுழலுங்கால் அதன் இனிய தொனியை நீங்கள் எப்பொழுதேனுஞ் செவியுற்றிருக்கிறீர்களா? அதன் ரீங்காரம் உங்களைப் பரவசப்படுத்திவிடும்.

இராட்டையின் சுழற்சி.

இராட்டை சுழலுங்கால் நீங்கள் தனியாயிருப்பது உங்களுக்

குத் தோன்றுது. அவசியமாக ஏற்படக்கூடிய சமயத்தயக்கத்துடன் பத்தரை மணி வரை இராட்டை சுழலுகின்றது. பத்தரை மணிக்கு அவர் ஸ்நானத்திற்குச் செல்லுகிறுர். நான் ஒன்றுகூற மறந்துவிட்டேன். அனுதினமும் காலையில் அவர் பஞ்சடித்து பட்டைபோடுகிறுர். இந்த அரைமணிநேரத்தில் அவர் பஞ்சடித்துப் பட்டைபோடுவது அவருக்கு அனுதினமும் நூற்கவேண்டியதற்கு அதிகமாகிவிடுகிறது. சர்தார் வல்லபாய்க்கு பட்டைபோட்ட பஞ்சுஒரு சமயம்தட்டிப்போய்விட்டது.அதனுல்அவர்சிறைகண்காணிப்பவர் வசம் கேட்டனுப்பியிருந்தார். என்னிடம் மிச்சமாக இல்லை. காந்தியடிகள், தமது அருமைக் குழந்தைகளுக்கு சந்தோஷமுடன் சமையல்செய்யும் தாயென, பஞ்சடித்துப் பட்டை போடுங் காலவரையை இரட்டிப்பாக்கிக்கொண்டார்.

அவரது மத்தியான திட்டம்.

பதினெருமணிக்கு நாங்கள் பகல் போஜனம் சாப்பிடுவோம். மறுபடியும் உப்புடன் கூடிய தயிரும் பேரீச்சம்பழமும் வெந்த காய்கறிகளுமே ஆகாரமாகும். இதே நேரத்தில் பத்திரிகைகள் வருகின்றன. குறுந்தடிப் பிரயோகங்கள் சம்பந்தமாகவும் பம்பாயின் வீர மாதர்கள் தேசியக்கொடியை உயரநாட்டுவதன் சம்மந்தமாகவும் வெளிவரும் பிந்திய செய்திகளை நான் வாசிப்பேன். அச்செய்திகளை அதுசமயம் வாதாடுவதில்லை. மாலையில் உலவும்பொழுதே அவை சம்பந்தமாகப் பேசிக்கொள்வோம். பகல்போஜன மருந்துஞ்சமயம்இயற்கைஉணவுகள்சம்பந்தமாகவும்இயற்கையான பரிகாரங்கள் சம்பந்தமாகவுமே காந்தியடிகள்சம்பாஷிப்பார். அதில் அவர்தக்கஅனுபவமும்தேர்ச்சியும்அதிகமாகப்பெற்றுள்ளார்.பகல் ஒன்றரை மணிக்கு எலிமிச்சம்பழச்சாறு கலந்த ஒருகோப்பைஜலம் அருந்துகிறுர். அதன் பின் கடிதங்கள் படிப்பார்; எழுதுவார். மீராபெண் நலத்திற்காக ஆசிரம பஜனுவலி ஸ்தோத்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் வேலையும் குறுக்கிடுகிறது. நான்குமணிக்கு தக்ளியை கையில் ஏந்திக்கொள்ளுகிறுர். இத்தக்ளியை அவரே செய்துகொண்டார். உடைந்த ஓடும் மூங்கில் குச்சியுமே அவரது தக்ளியாகும். சூரிய வெளிச்சத்தில் நடந்துகொண்டே பால் போன்ற வெள்ளை நூலை நூற்கிறுர். அழகிய சாய்பலை ஒரு சிட்டிகை எடுத்து தக்ளியிலும் விரலிலும் தடவிக்கொண்டால் தக்ளியின் சுழற்சி அதிகவேகமாகிறது.

மாலையில் உலாவுவதும் சம்பாஷிப்பதும்.

ஐந்தடிக்கவும் மாலை போஜனம் ஆரம்பித்துவிடும். அது சமயமும் தயிர், பேரீச்சம்பழம்; காய்கறிகளே. மறுபடியும் ஆடுகள் வரும்; அவைகளுடன் குட்டிகள் தங்கள் சிறிய வால்களை ஆட்டிக்கொண்டு தொடர்ந்துவரும். ஆகாரம் முடியவும் நான் பாத்திரங்களைச் சுத்தப்படுத்துவேன். காந்திஜீ அடுத்த நாளுக்கு வேண்டிய பேரீச்சம்பழங்களை சுத்தப்படுத்துவார். தண்ணீரில் ஊறவைப்பார். சூரியன் அஸ்தமிக்குஞ் சமயம் அதன் அழகிய காட்சி கண்டும் ஆகாயத்தின் அழகிய தோற்றங்கண்டும், சாம்பல் நிற மேகங்களின் விசித்திர உருவங்கள் கண்டும் ஆனந்திப்பார். இயற்கையழகு கண்டு இன்புறுவார். சிலசமயங்களில் அவைகளின் விசித்திர தோற்றங்களை என்னை விரைவில் கூவியழைத்துக் காண்பிப்பார். இவ்வியற்கை வனப்பின் மேற்கொண்ட வேட்கையால் அவர் தமது குறிப்பிட்ட வேலையையே சிறு நேரம் மறந்துவிடுவார். ஏழுமணிக்கு மாலை ஜெபம் ஆரம்பிப்போம். மழைகாலங்களில் 7.30. மணிக்கே மாலை ஜெபம் நடைபெறும். ஆனால் மழைகாலம் முடிவடையவும் மாலை ஜெபத்தை 7 மணிக்கே மாற்றிக்கொண்டோம். ஏனெனில் அதேநேரத்திலேயே ஆசிரமத்திலுள்ள பையன்களும் பெண்களும் ஜெபஞ்செய்வர். ஆசிரமச் சிறியார்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலிருப்பினும் அதேநேரத்தில் நாங்கள் ஜெபஞ்செய்வதால் அவர்களுடன் கலந்து ஜெபஞ்செய்கிறோமென்ற ஆறுதல் எங்களுக்குண்டு; ஜெபத்தின் சகோதரத்துவத் தன்மையை அறிந்தார் உணர்ந்து ஏற்பர்.

ஜெபத்திற்குப் பின்—கடிதங்கள்.

ஜெபஞ்செய்த பின் காந்தியடிகள் தமது கடிதங்களை எழுத ஆரம்பிப்பார். ஆசிரமத்தில் நாங்கள் ஓர் பெரிய குடும்பம். அங்குள்ள "பாபு" விடமிருந்து ஒரு சிறு சிட்டேனும் பெறவேண்டும். சில பெண்கள் "பாபு" வின் கைப்பிடிப் பிரம்பு எனக் கையொப்பமிட்டு கடிதம் விடுப்பதுண்டு. ஏனெனில் காந்தியடிகள் ஆசிரமத்தில் மாலையில் உலவும் பொழுது தமது கரத்தை அவர்கள் தோளின்மீது தாங்கலாகவைத்துக்கொண்டே நடப்பார். ஆசிரமவாசிகள் தாங்கள் செய்தவைகளை உண்மையுடன் வரைந்துவிடுவர்.

யாதேனுமோர் பையன் தனது சகோதரியிடம் முறட்டுத்தனமாக நடந்துகொண்டால் அதைத்தனது "பாபு" விடம் எழுதித்தெரிவித்துக்கொள்ளும் வரை அவனுக்குச் சந்தோஷமேற்படுவதில்லை. ஆசிரமத்திற்குப் புதிதாக வந்துசேரும் ஒருவன் 'எனக்கு ஜெபஞ்செய்யும் பொழுது நித்திரை வருகிறது; தவறாது நூல் நூற்பினும் அதில் எனக்கு இன்பமில்லை காரணமென்ன?' என பாபுவிடம் எழுதிக்கேட்கிறான். அதற்கு பாபுஜீ, 'ஏழைகளை நேசிப்பதற்கு நீ கற்றுக்கொள்ள வேண்டும். மனிதனுக்கு அவசியமான ஆகாரம், நித்திரை, வேலைபோன்று ஜெபமும் அத்தியாவசியமானதாகும்' என பதில் விடுப்பார். ஒரு வாலிபர் தமது அயோக்கியத்தனமான நடத்தைகளைக் குறிப்பிட்டு இனி நன்னடத்தையாக விருப்பதாக கடிதம் விடுப்பார். ஜெயிலதிகாரிகள் தமது கடிதங் காண்பரே யென அவர் பயப்படுவதில்லை. அன்றேல் வெட்குறுவதில்லை. என் அவர் பயப்படவேண்டும் அன்றேல் வெட்குறல் வேண்டும்? தமது ஹிருதயத்திலுள்ள மாசுகளைப்போக்கி புதியதோர் மனிதனாக ஆவதற்கு அவர் முடிவுசெய்துகொள்ளவில்லையா? ஒரு அருமைத்தந்தை தமது குமாரத்தியை இழந்துவிட்டார். உயிர்வாழ்வதா இறப்பதாவென்ற பிரச்னை அவரிடம் குடிகொண்டுவிட்டது. எவரிடம் சொல்லி அவர் ஆறுதல் செய்துகொள்வது? தனது மனக்கவலையை பாபுவிடம் தெரிவிக்கிறார். அதற்கவர் ஆறுதலான வார்த்தைகள் மட்டுமன்று, நம்பிக்கைவிசுவாசம், சந்தோஷ மடையக்கூடிய நிலையான செய்திகளையும் பெறுகிறார்.

களங்கமற்ற அயர்ந்த நித்திரை.

மணி ஒன்பது அடிக்கவும் காந்திஜி பேனாவைப் போட்டுவிட்டு சயனித்துக்கொள்ளுகிறார். அவர் பல்லாண்டுகளாக பரந்த வெளியில் நட்சத்திரங்கள் பிரகாசிக்க நித்திரைசெய்வது வழக்கம். சூரியவெளிச்சத்தைப்போல சந்திர வெளிச்சமும் நன்மை பயக்குமென்பதே அவரது நம்பிக்கை. எவ்விதக்குளிரும் பனியும் அவரை இம்மியும் அசைப்பதற்குப் பயந்து அவர் தாழ்வாரத்திற்கு ஓடுவதில்லை. இரவில் நான் பன்முறை எழுந்து பார்த்திருக்கின்றேன். அதுசமயங்களிலெல்லாம் அவர் களங்கமற்ற அயர்ந்த நித்திரையிலிருப்பதைக் கவனிப்பேன். (வீரகேசரி.)

கல்வியும்—வியாபார நோக்கமும்.

(டர்பன், சரஸ்வதி சபைத் தலைவர்,
திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் எழுதுவது.)

சிறுவர்களுடைய மனதை திடப்படுத்தி அவர்களுடைய அறிவும் மனோ பான்மையும் விசாலப்பட்டு உன்னத நோக்க முடையனவாய்ச் செய்தல் பெற்றோருடைய கடமையாகும். இது தான் சிறுவர்களுக்குப் பெரியோர் கொடுக்கும் மூலதனமாம். மற்றெல்லா மூலதனத்திற்கும் அழிவுண்டு. இம்மூலதனம் பெற்றவனுக்கு நன்மையைப் பயக்குவதுடன், உலகத்தாருக்கும் நன்மையைப் பயக்குவதாயிருக்கிறது. இக்காரியத்தை முன் னிட்டு தகுந்த கல்விப் பயிற்சியை கொடுக்கவேண்டும். கிராமபோன் இயந்திரத்தைபோல கேட்டவற்றை திரும்ப ஒப்புவிக்கும் பழக்கத்தை சிறுவர்களுக்கு ஏற்படுத்துவது கல்வியின் நோக்கமாய் இருக்கக்கூடாது. கல்வியானது சிறுவர்களுடைய புத்தியை சரியான நிலைமையில் வைத்து கூர்மையாக்கும் கருவியாகும். கூர்மையாக்குவதோடு, கூர்மையான அறிவை உபயோகப்படுத்தி உலகத்தாருக்கு நன்மையையும் உண்டாக்குகிறது.

தற்காலம் கொடுக்கப்படும் கல்வியை கவனிக்கையில் அது ஏற்பட்ட வேலையை சிறுவர்கள் மனதில் செய்கிறதாவென்று அறியக்கூடவில்லை. ஒரு கோழி முட்டையை எடுத்துவைத்துக் கொண்டு, அதற்குள் இருப்பது தானே கோழியாகிறது என்ற எண்ணத்தினால், ஏன் அந்த முட்டை கத்தவில்லை என்று வருத் தப்படுவதுபோல் கல்வியே சரியான நிலைமையில் கொடுக்கப்படாத சிறுவர்களால் ஏன் உலகத்திற்கு நன்மை ஏற்படவில்லை என்று பெரியவர்கள் கூக்குரலிடுகிறார்கள். முட்டைக்குள்ளிருக்கும் கருவே கோழியாகிறது என்றாலும், அது கோழியாவதற்கு அடைகாத்தல் போன்ற முறைகள் நடைபெறாவிட்டால் எவ்வாறு அம் முட்டை பிரயோஜனப்படாதோ, அதுபோலவே சிறுவர்களுடைய மனதையும் புத்தியையும் சீர்திருத்தி கூர்மைப்படுத்தும் கல்வியறிவை கொடுக்காமற்போனால் யாதொரு பிரயோஜனமுமில்லை.

எந்தத்தொழிலை எடுத்துக்கொண்டபோதிலும், அந்தத்தொழிலுக்கு தக்க கல்வியறிவு அதனைப் பயிலவிரும்பும் சிறுவர்களுக்குக் கொடுக்கவேண்டியது அவசியம். நமது நாட்டு வியாபாரிகள் பலரும் சிறுவர்களுக்கு அனுபவம்தான் வேண்டும். வியாபாரத்திற்கு கல்விவேண்டியதில்லை எனவும் நினைக்கிறார்கள். இது தவறுதலான அபிப்பிராயம். புஸ்தகப்படிப்பினால் ஒருவன் பெரிய வியாபாரியாய் வராமற்போனபோதிலும், அவன் கல்வியறிவைப் பெறுவதால் ஒரு பெரிய வியாபாரியாய் வருவதற்கான யோக்கியதையைப் பெறுகிறான்.

ஒரு கரடுமுரடான நிலத்தில் சில விதைகளைப்போடுகிறோம். உழுது சீர்திருத்தப்பட்ட நிலங்களில் சிலவிதைகளைப்போடுகிறோம். இரண்டு இடங்களிலும் விதைகள் முளைத்தபோதிலும் முதலில் சொன்னவிடத்தில் விளையும் பயிரைவிட இரண்டாவதாகச்சொன்னவிடத்தின் பயிர் அதிக செழுமையுடனும் அதிக பலனைக் கொடுக்கக்கூடியதாயும் உண்டாகிறது.

அதுபோல் ஒரேவித வசதியும், ஒரே அளவு முதலும் கல்விபெற்ற ஒருவனிடத்திலும், கல்வி பெறாத வேறொருவனிடத்திலும் இருக்குமானால் கல்வி பெறாதவனைவிட கல்வி பெற்றவனே மேன்மையுடனும், கௌரவத்துடனும் வாழ்வான் என்பதை நாம் சொல்லத்தேவையில்லை.

வியாபாரத்தில் அநுபவம் என்பது முக்கியமென்பதை நான் மறுக்கவில்லை. அந்த அநுபவம் பெறுவதற்காக ஒருவன் தன் ஆயுள் முழுவதும் செலவு செய்தாலும் போதாது. அநுபவம் பெறுவதிலேயே ஒருவன் தன் ஆயுளை செலவிடுவானானால் பெற்ற அநுபவத்தை உபயோகப்படுத்துவது எக்காலம்?

ஒருவன் புஸ்தகத்தை வாசிப்பதால் நன்மை பெறக்கூடும். புஸ்தகத்தில் சொல்லியிருக்கும் விஷயமெல்லாம் பலருடைய அநுபவமேயல்லாது, வேறல்ல. பலரும் தங்கள் தங்கள் தொழில்களில் பட்ட கஷ்டங்களையும், நஷ்டங்களையும் புஸ்தகமூலமாய் அறிந்துகொண்டு புஸ்தகங்களில் எழுதிவைத்திருப்பதால் அதனை அறிந்து அக்கஷ்டங்கள் மறுபடியும் தமக்கு ஏற்படாதபடிசெய்துகொள்ள

முடியாதா? அவரவர்கள் பட்ட கஷ்டத்தையும், நஷ்டத்தையும் தாமும் மறுபடியும் பட்டு சிரமப்பட்டால்தானு விளங்கும்? இவ்வுண்மையை அறியாமல் வியாபாரிகளுக்கு கல்விவேண்டியதில்லே. அநுபவந்தான் பெரிது என்று எவ்வாறு சொல்லத்துணியலாம்?

ஆனல் இப்போது அநுஷ்டிக்கப்படும் கல்வி முறையோ பொருத்தமானதாயில்லே. இதனே அநுஷ்டிப்பதால் வியாபாரிகளுக்கு பெருத்த நன்மைஏற்பட்டுவிடுமென்று நாம்சொல்வதற்கு இடமில்லே. இருந்தபோதிலும் வியாபாரிகள் ஒன்றுகூடி தங்கள் தங்களுக்கு எவ்விதமான அறிவு இருந்தால் நன்மையுண்டு என்பதை அறிந்து வேண்டிய முயற்சிகளேச் செய்வார்களானல், நல்ல பலன் கிடைக்குமென்பது நிச்சயம்.

இரண்டாம் ஆண்டு அறிவிப்பு.

இம்மாதத்தோடு நமது 'நவமணி'யின் முதலாவதாண்டு முடிவுறுகிறது. அடுத்துவரும் இரண்டாம் ஆண்டிற்கு ஒவ்வொருவரும்தங்கள்தங்கள்சந்தாவை அனுப்பவேண்டுவதோடு ஒவ்வொரு புதுச்சந்தாவேனும் சேர்த்துத்தர வேண்டுகிறோம். புதிய பல கட்டுரைகளோடும் அதிகப்பக்கங்களோடும்இரண்டாம் ஆண்டு முதல் 'நவமணி'வெளிவரும். ஒவ்வொருவரும் முன்னரே சந்தாவை அனுப்பி விடுதலே நலம். வி. பி. யனுப்புவதில் 1—1—31. முதல் உள்ள புதிய தபால் விதியின்படி மிகுந்தநஷ்டத்திற்குள்ளாக நேரிடுமாகையால் வி.பி. யனுப்பப்படமாட்டாது.

முதல் மாலேயின் 12 மணிகளுஞ்சேர்த்துக் காலிகோ பைண்ட் செய்யப்பட்ட புஸ்தகங்கள் சில கைவசமுள்ளன. வேண்டுவோர் ரூபாய் 1-8-0யும் தபாற் செலவு ரூ. 0-5-0ம் ஆக ரூ. 1-13—0. அனுப்பி பெற்றுக்கோள்ளலாம்.

மானேஜர்,
'நவமணி' பத்திரிகாலயம்.

கனகவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள்.

(289-வது பக்கத் தொடர்ச்சி.)

டென்று கூறுகின்றனர். அவரா இவ்விடுதியில் தங்கியிருக்கின்றனர்.

கம:— அவர் வரவில்லை. அவருடைய செல்வக்குமாரர் ஆனந்தராஜா, தன் வேலையாளுடன் வந்து தங்கியிருக்கிறார்.

காத்:— வேலையாள் ஒருவன்தானா? பலரா?

கம:— ஒருவனே. அவன் பெயர் வேலன். வேலையாளும் எஜமானனும் காலை 5-மணிக்கு குதிரை மீது கொண்டபல்லிக்குச் செல்லுகின்றனர்.

காத்:— அவர்கள் தங்களுடன் அதிகமானபணத்தை எடுத்துச் செல்லுகின்றனரா? கைவசம் பணம் இருக்கிறதென்பதற்கு அனுமானம் ஏதேனும் காணப்படுகிறதா? என்று வினவினன்!

கம:— நான் அவர்களை இதுவரையும் நேரில் பார்க்கவில்லை. சம்பாஷணையை ஒண்டியிருந்து கேட்டு விஷயம் அறிந்தேன். தூரப்பிரயாணம் செய்கின்றவர், அதிலும் பெருஞ் செல்வர். பணம் இல்லாமலா செல்வார்?

காத்:— சந்தோஷம். இப்பொழுது வீசுகின்ற வலையில் பெரிய மீன்விழக் கூடும். உன்பாடு யோகந்தான். எனக்கு நேரமாயிற்று. நான்போய் ஆள்களைத் திரட்டி வழிப்பறி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடும், சூழ்ச்சியும் செய்யவேண்டியிருக்கிறது. விடைகொடும். போய்வருகிறேன் என்றனன்.

கம:— நல்லது போய்வாரும். உமது காரியம் வெற்றியாக முடியவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். என்மீதுள்ள அன்பும், காதலும் மறவாதிருக்கவேண்டும்.

காத்:— அஃதை ஒருக்காலும் மறவேன். எப்பொழுதும் உனது நினைவே என்று கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

கமலம்:— அவனுக்குத் தாளிடப்பட்டிருந்த தெருக்கதவைத் திறந்துவழியனுப்பிவிட்டு, கதவுதாளிட்டுவிட்டு தானும் ஒரு அறையிற் சென்று நித்திரை செய்தனள். அவள் நித்திரையில், மலங்காட்டுக் கள்ளர்கள் தாங்கள் வழிமறித்துக் கொள்ளையிட்டுவந்த பொருள்களில் இரண்டு மோராமாலையையும் ஒரு கடிகாரச்சங்கிலியையும் தனக்குச் சன்மானம் செய்ததாகச் சொப்பனங்கண்டு அவர்களுக்குத் தனது சந்தோஷத்தையும் நன்றியறிதலையும் அறிவித்துக்கொண்டிருக்கையில், ஜாமக்கோழி "கொக்கரக்கோ" எனக் கூவிற்று. அங்ஙனம் கூவிய சத்தங்கேட்டதும் தனது படுக்கையைவிட்டெழுந்து தனது சொப்பன நிகழ்ச்சியைக் குறித்துப் படுக்கையறையில் குந்தியிருந்தே மனோ ராஜ்யம்செய்துவிட்டு பின்னரெழுந்து விளக்கேற்றிக்கொண்டு அறையை நீங்கி வெளியே வந்து கோவிந்தனை எழுப்பி, நித்திரைசெய்கின்ற வேலனை விளிக்கும்படி உத்திரவிட்டனன். அவன் அப்படியே செய்ய, வேலன் எழுந்து எஜமானன் குதிரைக்கு சேணம், கடிவாளம் முதலியன பூட்டியும், பிரயாணத்திற்குவேண்டிய ஏற்பாடு செய்து கொண்டும், எஜமானன் அருகே சென்று மெதுவாக கூவி அவரை விழிக்கச்செய்து எல்லாம் ஆயத்தமாயிருப்பதாக அறிவித்தனன். ராஜாவும் சட்டென்று படுக்கை விட்டெழுந்து தனது உடுப்புகளை ஒழுங்காய் அணிந்துகொண்டு உரையுடன் கூடிய உரைவாளை இடுப்பில் தொங்கவிட்டு குதிரைமீதாரோகணித்தனன். வேலனும் தனது எஜமானனுடைய படுக்கை, லெதர்பாக்ஸ் இவைகளைத் தலையில் சுமந்துகொண்டு பிரபுவைப் பின்தொடர்ந்து நடந்தனன்.

கமலம் இவர்கள் சென்றபின் தெருக்கதவு அடைத்து விடுதி வேலைகளைச்செய்ய தன் கீழுள்ள ஆட்களைத் தூண்டினள். ஆனந்தராஜாவும், அவனது சேவகனும் விடுதியைவிட்டு, குறுக்கு,

நெருக்கு, மூலை, வளைவுகளுள்ள நான்கைந்து சந்துகளைத்தாண்டி நேரான வழியமைந்த தெருவுக்குவந்து சேர்ந்தனர். அப்பொழுது தங்களைப்போலவே, பிரயாண நிமித்தம் சாப்பாட்டு விடுதிகளில் தங்கியிருந்த அயலூர் வாசிகள், நித்திரை நீங்கி மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டிருப்பவர்களும், பற்பல விஷயங்களைப் பற்றிப்பேசிக்கொண்டு செல்கின்ற பாட்டை சாரிகளும், நித்திரையின் மிகுதியால் விழிக்கமுடியாமல் தூங்கிக்கொண்டிருக்கிற நண்பர்களைக் கையினால் தட்டி அதட்டிஉரத்துக்கூவி எழுப்பிக்கொண்டிருப்பவர்களும், என்னுடைய சாமான்களைக் காணோமே, உன்னுடைய சாமானிருக்கிறதா? நன்றாகத் தேடிப்பார், ஐயோ! காணோமே என்று கூச்சலிடுபவர்களும் மிகுதியாய் இருந்தனர். அச்சமயத்தில் குதிரைகள் மீதேறிய பதின்மர், ஆனந்தராஜா நிற்குமிடத்தில் வந்து கூடினர். அங்ஙனம் வந்துகூடிய அவர்களை ஆனந்தராஜா! நீங்கள் யாவர்? எந்த ஊருக்குச்செல்கின்றீர்கள்? என்று வினவினன். அவர்களில் ஒருவன் ஐயா! நாங்கள் வர்த்தகர்கள் ஏலூரிலிருந்து ஜவுளி கொண்டுவந்து, ஓரங்கலிலும், கோலகொண்டாவிலும், குல்பர்காவிலும் விற்கிறவர்கள். எங்கள் கைவசமிருந்த சரக்குகள் முழுதும் விற்றுமுடிந்தது. மீண்டும் ஜவுளிகொண்டு வரச் செல்கின்றோம். என்று விடை கூறினன். அவர்களில் மற்றொருவன், ஆனந்தராஜாவைப் பார்த்து தாங்கள் யாவர்? எங்குச் செல்கின்றீர்கள் என்று கேட்டனன்? ஆனந்த ராஜா கள்ளங்கபடமறியாத உத்தம குணமும், சித்த சுத்தியும் உடையவனானதால், கொண்டபல்லிக்குச்செல்லும் தனது உத்தேசத்தை உள்ளபடியே உரைத்தனன். அவர்களில் பின்னொருவன் தங்கள் மரபு என்ன? என்று உசாவினன்? ராஜா, நான் க்ஷத்திரியன். என்வேலையாள் தாளாண்மையுள்ள வேளாளன் என்று உரைத்தனன். கள்வர் வேடமிட்ட அவர்கள் ராஜா கேளாமலே தாங்கள் தாஸர் என்ற பட்டமுடைய வடுகவேடுவர் குலத்தினர் என்றுகூறி மேலும் கூறியதாவது—'ஐயா! தங்களது அரிய சந்திப்பு எங்களுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. போருடைதரித்து வாளாயுதம் கைக்கொண்டுள்ள க்ஷத்திரிய வீரருடன் சேர்ந்து பிரயாணம் செய்வது இதுவே முதல்தடவை. உயிரை ஒருபொருட்படுத்தாத இயற்கை வீரமுடைய க்ஷத்திரியரொருவர் எங்களுடன்

சேர்ந்திருப்பதால் துன்பம் துக்கம்என்பவைகள் எங்களைத்திரும்பியும் பார்க்கமாட்டா. வழிப்பறிசெய்யும் கள்வர்களும் எங்களை அணுகார். பயமென்பதின்றிச் சந்தோஷமாகவே எங்கள் பிரயாணத்தைக்கழிப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதே.' இவ்வாறு நஞ்சமனங்கொண்டு வஞ்சகப்புகழ்ச்சிகூறிய கள்வர்களது நெஞ்சமுணராத இராஜா, களங்கமின்றி அவர்களுடன் கூடிப்பிரயாணஞ் செய்யத்தொடங்கினன்.

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க் கொரு

விசேஷச் செய்தி.

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலீதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்ததுமாகிய சிறந்த தமிழ்ப்பத்திரிகையில் விளப்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதாரர்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்கச் செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர்.

"இந்திய மித்திரன்."

ஈப்போ. (எப். எம். எஸ்.)

விகடத் துணுக்குகள்.

பிரயாணி:—டிரைவரே! பஸ் புறப்படும்பொழுதே டாங் நிறையப்பெட்ரோலை ஊத்திக்கொண்டால் இப்பொழுது வழியில் கஷ்டப்படவேண்டாமே?

டிரைவர்:— அதிகபாரம் ஏறினல் டயர் தேய்ந்துவிடும். அதனால்பெட்ரோலைக் குறைவாக ஊற்றினேன்.

ஃ ஃ ஃ

நீலாம்பாள்:—ஏண்டி கோனும்பாள்! உன் அத்தான்மார்களில் நீ யார் சொன்னபடி கேட்பாய்?

கோனும்பாள்:—எனக்கு நல்ல சேலையும் என் கணவனுக்கு நார்மடிப்பட்டும் வாங்கித்தருபவர் சொன்னபடி.

நீலாம்பாள்:— என்னடி இது! உனக்குத் தான் சேலைவாங்கித் தருகிறார். உன் கணவனுக்கு எதற்கு?

கோனும்பாள்:—இது தெரியாதா? அத்தான் சொல்படி நான் நடக்க விட்டுவைப்பதற்கு.

ஃ ஃ ஃ

ஏ:—ஐயா! நீர் ஒருவருடமாகப் பத்திரிகையைப் படித்து விட்டுசந்தாப்பணம் தராது மோசஞ்செய்வது முறையா?

பீ:—என்னிடம் காணும் முறைதவறிய காரியங்களில் இது பெரிதல்ல!

ஃ ஃ ஃ

வீரன்:—வஸ்தாதி என்பவன் யார்?

சூரன்:—மானத்தை வெளிவிட்டவனே வஸ்தாதி.

வழிப்போக்கன்:—ஓய் ஓட்டல் காரரே! பொருத்தமில்லாத பண்டங்களையெல்லாம் ஏன் வைத்திருக்கிறீர்.

ஓட்டல்காரன்:— சாப்பிடவரும் வழிப்போக்கர்களுக்குத் தள்ளிவிடத்தான்.

வழிப்போக்கன்:—அப்படியானல், உமக்கும் உம் வீட்டுக்காரிக்கும் பொருத்தமில்லையாமே?

ஃ ஃ ஃ

வரதன்:—ஏ பரதா! காயம் எங்கே கிடைக்கும்?
பரதன்:—மோட்டார் பஸ்ஸில் ஏறி விழுந்தால் கிடைக்கும்.

ஃ ஃ ஃ

பையன்:—அம்மா! தின்பண்டம் வாங்கக்காசுதா.

தாய்:—உன் அப்பாவைக் கேளு தருவார்.

பையன்:— ஜயிலில் இருக்காரே அந்த அப்பாவையா? நித்தம் நித்தம் வருகிறாரே அந்த அப்பாவையா?

ஃ ஃ ஃ

தலையாரி:—சாமி! நம்மள் மாட்டிற்குத் தவிவாடுங்கப்பண மில்லையே?

முன்சீபு:—யார் மாட்டையாவது பவுண்டில் அடைத்துவிடு.

ஃ ஃ ஃ

சீர்திருத்தக்காரன்:—ஐயா! நமது கிராமத்தில் சீர்திருத்தப் பிரசங்கத்திற்கு எவரும் வரமாட்டேனென்கிறார்களே அதென்ன?

சாமியார்:—ஆண்களைக்கொண்டு பிரசங்கம் பண்ணச்சொல்லி யிருப்பாய். அதனால்தான் ஒருவரும் வரவில்லை.

ஃ ஃ ஃ

மாஜிஸ்டிரேட்: அடே! கைதி, நீ ஜயிலைவிட்டு வெளியே போய்ஒருமாத மாகவில்லையே, மறுபடி குற்றஞ்செய்யலாமா?

கைதி:—அடுத்தமாத முதல் மழை காலமாகையால் எனக்குக்குடியிருக்க வீடில்லை. அதனால் ஜயிலிலிருக்க எண்ணம்.

ஃ ஃ ஃ

அ:—இவ்வூரில் பற்பல பணக்காரர்களிருக்கையில் கஞ்சி டாக்டர்வார்க்கிறாரே, அது ஏன்?

ஆ:—பசி மிகுந்தால் வியாதிவரும். ஏழைகளுக்கு வியாதிவந்தால் நாம் தானே மருந்து கொடுக்கவேண்டுமென்று அந்த தியாகமூர்த்தி கஞ்சி வார்க்கிறார்.

ஃ ஃ ஃ

ராமன்:—மாதப்பிறப்பு என்றைக்கு.

பீமன்:—முதல்தேதி.

ஆந்திர நாடு.

பதினைந்தாம் நூற்றாண்டின் பாஷையின் நிலைமை.

(கி. பி. 1419—1446.)

கோவை. திரு சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதுவது.

(276-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகைவர்களின் படையெடுப்பால் துன்பமடைந்த விஜய நகர சாம்ராஜ்யம் இம்மடி பிரபுட தேவராயன் சிம்மாசனம் ஏறிய நாள் முதல் பெருமை பெறத்தொடங்கியது. மகம்மதியர்களின் பட்சவாதியான 'பெரிஷ்ட்' என்ற வரலாற்று ஆசிரியன், 'விஜய நகரத்து அரசர்கள் பஹமனி சக்கரவர்த்தியினால் தோல்வியடைந்து தீர்வை செலுத்திவந்தார்கள்' என்ற தனது நூலில் எழுதியிருப்பது உண்மையுடையதல்லவென சாஸனங்களும், பிற சரித்திராசிரியர்களும் கூறுவதனால் தேவராயன் போர்த்திறமை இனைத்தென அறியலாகும். அன்றியும் ஸ்ரீகிருஷ்ண தேவராயனுக்குப் பின்னர் வரலாறெழுதிய 'நூனிக்ஸ்' என்ற போர்த்துக்கேசியன், பிரபுட தேவராயன் பிரபல சக்கரவர்த்தியென்றும் அவனது அதிகாரத்தின் கீழ் கர்னாடக சாம்ராஜ்யம், சிங்களத் தீவம், தத்துகுடிபேக்கு, தென்னாசிரமம், பர்மா முதலான தேசங்கள் அடங்கியிருந்ததென்றும், கி. பி. 1422 ஆம் ஆண்டில் தேவராயன் தனது தண்ட நாயகனான லக்குமண ஆமாத்யனைக் கோலகொண்டாவின் மீது படையெடுக்கச் செய்து அவனது அரண் சூழ்ந்த துர்க்கத்தைக் கைப்பற்றி அதனுள்ளிருந்த பலரையும் சிறை செய்தானென்றும் தனது கைக்குறிப்பில் எழுதிவைத்திருப்பதாக விஜய நகரத்தில் வசித்த 'அப்துல்ரஜாக்' என்ற மகம்மதிய பண்டிதனது எழுத்துக்களாலும் விளக்கமாகின்றது. அம்மட்டோ! பிரபுடதேவராயன், இராஜ மகேந்திர வரத்தில் இராஜ துரோக சூழ்ச்சியிலும், துஷ்டச்செயல்களிலும் தேர்ந்த "ராஜா ரெட்டி" என்ற கொடியனை 'கோண்ட வீடு' என்னும் நகரத்திலிருந்து வெளியேற்றி அவனுக்கு உடந்தையாயிருந்த 'கஜபதிராஜன்' 'அல்லாட ரெட்டி' என்பவர்களையும் சிறை செய்து நாட்டுக்கு நன்மை விளைத்தான். இது நிற்க.

ஒரு நாட்டின் பாஷை உன்னதப்பதவியில் உயரவேண்டுமானல் நாட்டில் சாந்தமும் இன்பமும் பெருகியிருத்தல்வேண்டும். இவ்வுண்மை பற்பல நாட்டு இலக்கிய வரலாறுகளால் நன்கறியப்படும். மக்களின் அறிவும், இன்பமும் மேம்படுவதற்குச் சுவை நிரம்பிய பிரபந்தங்கள் பெருகிப் பிரவகிக்க வேண்டும். அப்பிரவாகத்தைப் பெருக்க அரசன் முயன்றுகொண்டிருந்தான்.

பதினென்று, பன்னிரண்டாம் நூற்ருண்டுகளில், 'சாளுக்ய காலசூரி' அரசர்களின் காலத்தில் 'பசுவேஸ்வரன் சேண்பசுவேஸ்வரன்' ஏகாந்த இராமையா முதலிய வித்துவான்களால் தோற்றுவிக்கப்பட்ட நூதன வீரசைவ மதப்பிரவாகம் பேரொலியுடன் பெருக்கெடுத்து தக்ஷிண பரதக்கண்டம் முழுதும் பரவி மதசம்பிரதாயத்திலும், கல்வியுலகிலும் பெரிய மாறுதலை விளைவித்தது. பதின்மூனறு பதினுன்காவது நூற்ருண்டுகளில் இந்நூதன வீரசைவப் பேரலைகள் வேகங்குறைந்து நிதானப்பட்டன. இந்நிதானத்திற்குக் காரணம் பதினுன்காம் நூற்ருண்டில் தோன்றிய வீரவைணவ—ஸ்மார்த்த மாத்வ மதங்களின் ஸ்தாபனுசார்யர்களான வேதாந்த தேசிகர், 'அக்ஷோபதீர்த்தர்' 'ஜயதீர்த்தர்' 'சாரணர்' 'வித்தியாரண்யர்' 'வித்தியாசங்கர்' 'காசி விலாசர்' 'திரியகம்ப விலாஸர்' 'கிரியாஸக்தி' முதலானவர்களின் முயற்சியேயாம். பதினைந்தாவது நூற்ருண்டில் வீரசைவமதம் மீண்டும் புதிய உருவத்தில், உற்சாக முறையில் தேவராயன் வித்துவ மண்டபத்தினின்றும் வெளிப்பட்டு தேசப்பாஷையிற் கலந்துமேம்பட்டது.

இம்மேம்பாட்டின் காரணமாக பிரபுட தேவராயனை அறியாதவர்களும் நன்கு அறியலானுர்கள். சிலர் அவனை நலங்களுக்கெல்லாம் உறைவிடமானவனென்றும், ஐஸ்வர்ய வந்தவனென்றும், அறிவின் மிக்கானென்றும், இந்திரனுக்கு நிகரானவனென்றும், மிகவும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். சென்ன பசுவ புராணத்திலும். "இந்திரனே ஈச்சுரன் கட்டளைப்படி வீர சைவமதம் மிகுதியாகப் பரவுதற்குப் பிரபுட தேவராயன் பூலோகத்தில் அவதரித்திருக்கின்ருன்" என்று கூறப்பட்டிருப்பது இந்திரன் என்று கூறியதற்கு ஏற்ற சான்ருகும்.

பிரபுட தேவராயன் கல்வியிலும், அறிவிலும், அன்பிலும், சைவத் துறையிலும், சமய ஞானத்திலும் மேலானவனென்பதற்கு அவனது அவைக்களப்புலவர்களாக விளங்கியவர்களின் அபிதானங்களே திருஷ்டாந்தமாம். அப்பெயர்கள் பின் வருமாறு:—மகாலிங்கதேவர், தோண்டத சித்திலிங்காசார்யர், லக்கணதாண்டவ நாதர், ஜக்கணர், குமாரபங்கநாதர், சாமரஸர், கல்லுமடம் பிரபுதேவர், கரஸ்தலவீரண்ணர், கரஸ்தலநாகதேவர், ஸ்ரீகிரீந்திரர், மக்கயமாயி தேவர், குருபசவர், பத்தலேஸ்வரர், இவர்கள் துறவிகளான நூற்றொருவரில் முதன்மையுடையவர்கள்.

தேவராயன் பரமசைவாகம சம்பன்னன் என்றும், அவனது ஆசிரியர், "காஸ்மீர சிவாசாரகர்ம—"சந்திரபூஷண கிரியாசக்தி" என்ற பெயரினர் என்றும், கி. பி. 1419-ஆம் ஆண்டுக்கல்வெட்டொன்று கூறுகிறது.

அரசனிடத்து அன்பும் அபிமானமுமுடைய லக்குமண ஜக்கணர்கள் மஹேஸ்வரனைப் பூசிப்பவர்களானதனால், தேவராயன் வீர சைவ மதாபிமானியாகவேயிருக்கவேண்டுமெனக் கருதலாம். ஆசாரியர்கள் தன்னிடத்து அன்பும், அபிமானமும் வைத்திருந்ததுபோலவே அரசனும் ஆசாரியரிடத்துப் பக்திகொண்டிருந்தான். இவற்றால் அம்மதத்திற்கு அபிவிருத்தியும் ஆதரவும் ஏற்பட்டிருந்தன. தேவராயன் வீரசைவப்பற்றுடையவனெனினும், வைணவம், புத்தம் முதலிய மதங்களில் வெறுப்பும், விகற்பமுங்கொள்ளாமல் எம்மதத்தினும் சம்மதமுடையவனாகவேயிருந்தான். இதற்குச்சான்று—பிரபுடதேவராயனது வைணவ குருவாகிய "கந்தாளபெத்தி" என்பவர் இராமாயணம் பிரசங்கம் செய்ய தான் அன்புடன் கேட்டு அவருக்குச் சன்மானஞ்செய்ததும்; தேவராயனே 'ஹம்பி' யில் ஜீரணமாயிருந்த "ஹஜரா ராமசாமிதேவாலயத்தை ஜீர்ணோத்தாரணஞ் செய்வித்ததுமேயாம். அம்மட்டோ! இராம சரித சம்பந்தமான "மஹா நாடக சுதாநிதி" என்ற காவ்யத்தையும் பிரபுட தேவராயனே இயற்றினனென்னில் வேறு கூறுவானேன்? ஆயின் அவனது காலத்தில் வீர சைவமதம் மட்டும் உன்னத பதவியில் ஓங்கியிருந்ததெனக் கருதுவது தவறாகாது.

(தொடரும்.)

நாற்றிசை நடப்பு.

உள்ளூர்ச் செய்தி.

பள்ளத்தூர். திவான்பகஹதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்களுக்கு சென்னை ஷெரீப்பாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி இவ்வூரிலும் கொத்தமங்கலத்திலும் நகரத்தார்களால் தனித்தனி இருவிருந்துகள் நடைபெற்றன. அதில் பலர் அவர்களின் புகழைப்பற்றிப் பிரசிங்கித்தனர். இவ்வூரில் வைபவத்திற்குகனம்இராமனாதபுரம் ராஜா அவர்களும் கொத்தமங்கலத்தில் கனம் செட்டிநாட்டரசர் அவர்களும் தலைமைவகித்தார்கள்.

இளைஞர் சங்கம்.

புதுவயல் இளைஞர் சங்க நான்காவதாண்டு விழா 8—1—31. தேதியில் திரு. சோமசுந்தரபாரதியவர்கள் M.A. BL. தலைமையில் மிகச்சிறப்பாகநடைபெற்றது. மஹிபாலன்பட்டி பண்டித மணி முதலானோர் சொற்பொழிவுகள் இன்றியமையாதனவாய் விளங்கின. 19-1-31-ல் சரஸ்வதி சங்கச் சார்பில் பண்டித ரத்னம் அவர்கள் தலைமையில் கோட்டையூர் பள்ளிக்கூட மாணுக்கர்கள் நடித்த 'பொங்கல்பண்டிகை' என்னும் நாடகம் மிகச் சிறப்பாக விளங்கிற்று. ஏராளமான ஸ்திரீ புருஷர் குழுமி யிருந்தனர்.

கோட்டையூர் இந்திய இளைஞர் சங்கம்.

மேற்படி பெயருடன் கூடிய சங்கமொன்று கோட்டையூரில் 21—1—31. தேதி காலை 10-மணிக்கு ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முதல் கூட்டம் 'நவமணி' ஆசிரியர் திரு. சிராம. இராமனாத முதலியார் தலைமையில் 'தனவணிகன்' அச்சுக்கூடத்தில் நடைபெற்றது. 'தனவணிகன்' நிர்வாக ஆசிரியர் திரு. கருப்பஞ்செட்டியார் சங்கத்தின் நோக்கங்களைப்பற்றி விளக்கிய பின் திரு. V. G. நாயர் தலைவராகவும் திரு. நடேசன் காரியதரிசியாகவும் மற்றும்

மூவர் நிர்வாகஸ்தர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டபின்னர் தலைவரவர்களின் முடிவுரையோடு கூட்டம் இனிது நிறைவெய்தியது.

திரு. சத்தியமூர்த்தி அவர்கள்.

தமிழ்நாடு கார்வார் சபைத் தலைவர் திரு. S. சத்தியமூர்த்தி ஐயரவர்கள் அந்நியத்துணி மரியல் செய்ததற்காக மற்றும் பன்னிரெண்டு பெயருடன் சிறைபுகுந்தார். அவ்வழக்கில் அவருக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. திரு. பாஷ்யம் ஐயங்கார் அடுத்த தலைவராவர்.

ஸ்ரீமதி. மரகதவல்லி

இராமனுதபுரம்ஜில்லாபோர்டில் ஸ்ரீமதி. மரகதவல்லி அம்மையார் பெண்களுக்குரிய ஓர் ஸ்தானத்திற்கு நாமினேஷன் செய்யப்பட்ட செய்தி ஓர் நற்செய்தியாகும்.

பெண்கள் மஹாநாடு.

அகில இந்தியப் பெண்கள் மகாநாடு லாகூரில் சென்னை டாக்டர் ஸ்ரீமதி. முத்துலக்ஷ்மி அம்மாள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ்செய்தனர். அங்கு தலைவர் பேசிய தலைமையுரை அடுத்த 'நவமணி' யில் வெளிவரும்.

பர்மாக் கலவரம்.

பர்மாவில் தாராவாடி ஜில்லாவில் பல கலகக்காரர்கள் பெருங்கலகம் விளைவித்ததன் பயனாக அரசாங்கத்தார் போதிய படைகளை அனுப்பிப் பலரைச் சுட்டும் பலரைக் கைதிசெய்தும் வருகின்றனர். இன்னும் கலகம் பூரணமாக அடங்கியதாகத் தெரியவில்லை.

மஹாத்மாவிற்குப் பரிசு.

ஜனவரிப்பரிசாகமஹாத்மாஜீக்குடம்டம்ஜயிலில்வதியும்அரசியல்

கைதிகள் நூற்ற நூலைக்கொண்டு நெய்த ஆறு கதர் பீசுகள் பரிசளிக்கப்பட்டதாம். அதை அவர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டாராம்.

குதிரை கைதியான அதிசயம்.

கல்கத்தாவின் அருகாமையிலுள்ள பெட்டியா என்ற ஊரில் ஓர் அரசியல் வாதி குதிரையில் சென்று கொண்டிருந்தார். அவரையும் குதிரையையும் உடனே போலீசார் கைதுசெய்து குதிரையை மட்டும் ரூபாய் 200 ஜாமீனில் விடுதலை செய்தார்கள். அதன் சொந்தக்காரரை 'லாக்கப்'பில் வைத்திருந்தார்கள். இவ்வாறு செய்யப்பட்டதன் காரணம் குதிரையின் சொந்தக்காரருக்கு அபராதம் விதிப்பதாயின் ஜாமீன்தொகைக்கு சமமான பொருளைக் குதிரையிடமிருந்து வசூல் செய்யலாம் என்பதேயாகும் என்று நம்பப்படுகிறது.

இங்கிலாந்தில் விவாக ரத்து.

லண்டன் ஹைக்கோர்ட்டில் விவாக ரத்துக்காக 637 வழக்குகள் எதிர்வாதம் செய்யப்படாமலே வந்திருக்கின்றனவாம். எதிர் வழக்காடும் இத்தகைய வழக்குகள் தொகை 200 க்கு மேல் இருக்குமாம்.

ஸ்ரீமதி. கமலா நேரு.

பண்டித ஜவஹர்லாலின் மனைவியாகிய ஸ்ரீமதி. கமலா நேரு கைதுசெய்யப்பட்டு நைனி ஜெயிலில் பி. வகுப்பு. கைதியாக வைக்க உத்திரவிடப்பட்டிருந்தது. தற்பொழுது அவர் லட்சுமணபுரி ஜெயிலுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

வல்லபாய் படேல்.

திரு. வல்லபாய் படேலுக்குக் கிரிமினல் திருத்தச் சட்டத்தின்படி 9-மாதம் சாதாரணத் தண்டனை, ஜனவரி-மீ 6-உ பம்

பாய்ப் பிரதம பிரிஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டால் விதிக்கப்பட்டது.

இந்தியச் சட்டசபை.

இந்தியச் சட்டசபை ஜனவரி 14-ம் நாள் ஆரம்பமாகும். அத்தருணம் அங்கத்தினர்கள் இராஜவிசுவாசப் பிரமாணம் செய்தது நிரந்தரப் பணக் கமிட்டிக்கும் அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பின்னர் பொதுக் கணக்குக் கமிட்டிக்கும் மெம்பர்கள் தேர்தல் நடைபெறும்.

தாராவாடிக் கலகம்.

தாராவாடிக் கலகக்காரர்களைக் கண்டுபிடிக்க ஓர் ஆகாயவிமானம் டெல்லா ஜில்லாவின் மீது வட்டமிட்டு வருகிறதாம். கலகத் தலைவரைப் பிடிப்பவருக்கு பரிசளிக்கப்படுமென்றும் அரசாங்கத்தார் அறிவித்துள்ளார். தாராவாடியிலிருந்து சுமார் 300 கைதிகள் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார். அவர்களை விசாரிக்கத் தனி நீதிபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

அன்சாரி விடுதலை.

குஜராத் ஜயிலில் சிறைவாசம் செய்துவந்த டாக்டர் அன்சாரி, பாரிஸ்டர் அசப் ஆலி, மௌலானா அகமத் சயத், பஸ்ருல் ஹக் ஆகியோர் ஜனவரி 8-ம் தேதி விடுதலைபெற்றார்.

சிரத்தானந்தர் பேத்தி.

சுவாமி சிரத்தானந்தரின் மூன்றாவது பேத்தியாகிய குமாரி கௌசல்யாதேவி கிரிமினல் திருத்தச் சட்டப்படி கைதுசெய்யப்பட்டு 5-மாத காவல் தண்டனை பெற்றுள்ளார்.

அட்வான்ஸ் ஆசிரியர்.

கல்கத்தாவிலிருந்து வெளியாகும் "அட்வான்ஸ்" எனும் தினசரியின் ஆசிரியர் போஜேந்திரநாத் குப்தா ராஜத்துரோகக் குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை பெற்றிருக்கிறார்.

"தனவணிகன்"

கோட்டையூர்.

பொதுவாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் சிறப்பாக தனவணிக சமூக முன்னேற்றத்துக்கும், தமிழ்மொழி தமிழ் நாகரீக முதலியவைகளின் முன்னேற்றத்திற்கும் கல்வியபிவிருத்திக்கும் உழைக்கும் ஓர் உயரிய மாதப்பத்திரிகை.

தமிழ்நாட்டிலுள்ள பிரபல எழுத்தாளர்களால் வரையப்பெற்ற உயர்தரக் கட்டுரைகளை தன்னகத்தே கொண்டு ஆப்டோன்படங்களுடனும் சித்திரப்படங்களுடனும் திகழும் இப்பத்திரிகையின் வருடச்சந்தா உள்நாடு ரூபாய் இரண்டேயாகும். வெளிநாடு சந்தா ரூபாய் இரண்டரை.

தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளாலும், பாராட்டப்பெற்றுள்ள தனவணிகனுக்கு இன்றே சந்தாதாராய்ச் சேருங்கள்.

மாதிரிப்பிரதி வேண்டுவோர் மூன்றணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விளம்பர விகிதங்களுக்கு மானேஜருக்கு எழுதுக.

மானேஜர்

'தனவணிகன்' பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

கோட்டையூர்.

Regd. No. M. 2646.

The City Photo Works.

Photographers and Bromide Enlargers,

Opposite Variety Hall,

Coimbatore.

நாங்கள் மிக உயர்ந்த முறையில் போட்டோ எடுத்து சுத்தமாகவும் அழகாகவும் படங்களைத் தயார்செய்து தருவதோடு என்லார்ஜ்மேண்ட் செய்யவும் ஆயில் பேயிண்ட் செய்யவும் சித்தமாக இருக்கிறோம். நிதானமான சார்ஜ்: சோன்னபடி கோடுக்குந் திறமை வேலையின் உயர்வு முதலியவைகளை ஓர் ஆர்டர் கோடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

எல்லா வியாதிகளுக்கும் சிறந்த மருந்து

மணிரசம் ஒன்றே!

இதன் விலை புட்டி 1க்கு	ரூ. 1—8—0
மணிதந்த சுத்திப்போடி டப்பி 1க்கு	ரூ. 1—4—0
மணிமாத்திரை50கோண்டபாட்டில்1க்கு	ரூ. 1—4—0
மணி ஓமத்திராவகம் முழுபாட்டில் 1க்கு	ரூ. 1—0—0
மேற்படி பாட்டில் ½ க்கு	ரூ. 0-10-0

கிடைக்குமிடம்.

மணி ஔஷதாலயம்.

P. O. கொத்தமங்கலம்.

ராமனாதபுரம் ஜில்லா.

Printed & Published by S. RM. Ramanatha Mudaliar
at Vedhambal Press Pallatur. (Ramnad Dt.)